Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 09 (28.06.2004) திங்கட்கிழமை இதழ் :269

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM, NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க முன் கருணா விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி!

## புலிகளின் கடுமையான நிலைப்பாடு நோர்வே ஊடாக அறிவிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் – இராணுவப் பாதுகாப்பில் இருக்கும் கருணா விவகாரத்துக்கு உறுதியான தீர்வு காணப்பட வேண்டும் என, நோர்வே அனுசரணையாளர்களிடம் விடுதலைப் புலிகள் வலி யுறுத்தவிருப்பதாகக் கூறப்படுகிறது.**

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணாவை இராணுவப் புலனாய்வுத்துறை பாதுகாத்து வருவதுடன் - அவரைப் பயன்படுத்தி கிழக்கில் பல்வேறு சீர்குலைவு நடவடிக்கைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

இது தொடர்பான தகவல்களை கருணாவிடமிருந்து தப்பிவந்து சரணடைந்த நான்கு பெண் புலிகள் வெளியிட்டிருந்தனர். இதனையடுத்து கருணாவிற்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கியதென்பதை அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீரவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

கருணாவுக்குப் பாதுகாப்பு வழங்கி - அவர் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களையும், சீர்குலைவுகளையும் ஏற்படுத்தும் அரச படையுடன் சந்திப்புக்களை நடத்தப்போவதில்லையென்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கம் கருணா விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு இராணுவ அதிகாரியும் கருணாவுக்கு பாதுகாப்பளிக்கவில்லை!

## இப்படிக் கூறுகிறார் லயனல் பலகல்ல

(லண்டன்)

புலிகள் அமைப்பிலிருந்து விலகிச்சென்ற கருணாவைப் பாதுகாப்பதில் எந்தவொரு இராணுவ அதிகாரியும் சம்பந்தப்படவில்லை என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கருணாவை இராணுவத்தினர் பாதுகாத்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது.

கடந்த மூன்று வருடங்களில் இராணுவத்தினர் மீது இதுபோன்ற பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவந்தன. ஆனால், சமாதான முயற்சிகளை பொறுத்தவரை அதனைச் சீர்குலைக்கும் வகையில் இராணுவம் எதுவும் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கருணா விடயத்தில் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதாக ஏற்கனவே தகவல் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## நான்கு கடற்கரும்புலிகள் படகு விபத்தில் வீரச்சாவு!

(கிளிநொச்சி)

சர்வதேச கடற்பரப்பில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் திகதி ஏற்பட்ட படகு விபத்தில் நான்கு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்ததாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடற்கரும்புலி லெப்ரினன்ட் கேணல் யாழினி, (நாகரத்தினம் - நிரஞ்சினி, தோப்புக்காடு காரைநகர்), கடற்கரும்புலி லெப்ரினன்ட் கேணல் அமுதம்/ஈழப்பிரியா (பாலசுப்பிரமணியம் - சுகந்தி, பன்னாலை, தெல்லிப்பளை), கடற்கரும்புலி - மேஜர் கதிர்ஓவியன் (செல்வன் - தெல்லிப்பளை), கடற்கரும்புலி - கப்டன் ஈகைவாணன் (குகேந்திரன் ரமணன், நந்தாவில் அம்மன் கோவிலடி - கொக்குவில் மேற்கு) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## அக்கரைபற்றில் கைக்குண்டு வீச்சு; கணவனும் மனைவியும் பலி!

(அம்பாறை)

அக்கரைப்பற்று - திருக்கோவில் பிரதேச பொலிஸ் பிரிவின் கீழுள்ள சங்கமன் கண்டி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் கணவனும், மனைவியும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கோபால் கணேஷ் (வயது - 45), அவரது மனைவியான மாரியம்மா (வயது 35) இருவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

எனினும் அவர்களது ஒன்பது மாதக் குழந்தை இந்தத் தாக்குதலில் இருந்து உயிர்தப்பியது.

சில தினங்களுக்கு முன்னர் தடுப்புக் காவலில் இருந்து பிணையில் விடுதலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னாட்டு பிளட்டூன் பயிற்சி நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

(கொழும்பு)

ஐந்து நாடுகள் பங்கேற்ற ஐக்கிய நாடுகள் சமாதான உதவி நடவடிக்கைத் திட்டத்திற்கான பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகைப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குக்குலேகங்கவில் இடம்பெற்றது.

கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் பயிற்சி நிகழ்வில் - பங்களாதேஷ், நேபாளம், மொங்கோலியா, அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் பங்குபற்றினர். இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வில் இறுதிப் படையணி வகுப்பும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது பயிற்சியில் பங்கேற்ற நாடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுவார கால சேவை நீடிப்பு; பலகல்லவின் கோரிக்கை நிராகரிப்பு!

(கொழும்பு)

இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, தனது பதவியை மேலும் ஆறு வாரங்களுக்கு நீடிப்பதற்கு அனுமதி தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த போதும், அவரது கோரிக்கை ஜனாதிபதி சந்திரிகாவினால் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டு இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல - தனக்கு ஆறு வாரங்கள் சேவை நீடிப்பு வழங்கினால் இராணுவத் தளபதி பதவியில் நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்ய முடியும் என்றும் இதற்கு அனுமதி தருமாறும் விடுத்த கோரிக்கை நிரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரத்தினை பயன்படுத்தி

## ஐ.தே.க. முன்னாள் அமைச்சர்கள்

# நிறைவேற்று அதிகாரத்தினை பயன்படுத்தி வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம்!

## ஜனாதிபதி திட்டமிடுவதாக தகவல் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிக்கான இடைக் கால தன்னாட்சி அதிகார சபையை விடு தலைப் புலிகளுக்கு வழங்குவதற்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாக ஜனாதி பதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட் டும் செய்திகள் தெரிவித்தன.

சிறுபான்மை அரசாங்கமே உள்ள நிலை யில் நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வா கத்தை ஏற்படுத்த முடியாது. அரசாங்கத்தில் ஜே.வி.பியின் செல்வாக்கு அதிகளவில் காணப்படுவதால், இடைக்கால நிர்வாகத்தை நாடாளுமன்ற அங்கீகாரம் மூலம் ஏற்படுத்து வது இயலாத காரியமாகும்.

இதனால், இலங்கை அரசியல் அமைப் பின் 33 ஆவது பிரிவு 'சி' பகுதியின்படி, தமக்கு வழங்கப்பட்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - இன்று கொழும்பு வரும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் ஜனாதிபதி சந் திரிகாவின் இந்தத் திட்டம் தொடர்பான செய்தி புலிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டது.

# ஐ.தே.க. முன்னாள் அமைச்சர்கள் எந்நேரமும் கைதுசெய்யப்படலாம்!

## பொலிஸ் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் சிலர் லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களின் பேரில் எந்தநேரமும் கைது செய்யப்படலாம் என பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர்கள் சிலர் லஞ்ச ஊழல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பொலிஸ் திணைக்களத்தின் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்குப் பொறுப்பான அதிகாரிகள் விசாரணைகளை நடத்திவருவதாகவும் இன் னும் சில தினங்களில் அவர்கள் கைதுசெய் யப்படலாம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களைக் கைதுசெய் வது குறித்து நீதிமன்ற ஆலோசனைகள் பெறப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐ.தே.கட்சியின் கடந்த ஆட்சிக்காலத்தில் லஞ்ச ஊழலில் ஈடுபட்ட தாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டு குறித்த விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ள தாகவும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர் பாக இன்னும் சில தினங்களில் இவர் கைது செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# கண்காணிப்புக்குழுத் தலைவரை தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பார்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்ட் புறுவ் ஹொவ்டே - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்திக்கவுள்ளதாக, கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இன்று காலை 11 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர்களுக்கும், படைத்தரப்பினருக்கும் இடையே நடைபெற்று வந்த மாதாந்தச் சந்திப்புக்களில் இருந்து, விடுதலைப் புலிகள் விலகிக் கொள்ளப்போவதாக எச்சரித்துள்ளமை குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.





EXPOAIR

Your friend in the skies...

### கரவெட்டி - உச்சில் குளத்தில்

# நீரினைப் பயன்படுத்தத் தடைவிதிப்பு; சிறுபோக பயிர்ச்செய்கைகள் பாதிப்பு!

(வடமராட்சி)

கரவெட்டிப் பகுதி வயல் நிலங்களில் சிறுபோகப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் குளத்திலிருந்து நீரினைப் பெறுவதற்கு தடைவிதிக்கப்பட்டு வருவதால், சிறுபோகப்பயிர்ச்செய்கை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி உச்சில் குளத்திற்குச் சமீபமாக உள்ள வயல்களிலேயே பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்திலிருந்து கடந்த காலங்களில் சிறுபோகப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும், தற்போது விவசாயச் செய்கையினை மேற்கொள்வதற்காக இந்தக்குளம் புனரமைக்கப்பட்டிருந்தது.

இந்தக்குளத்தை, இந்தப்பகுதி மக்கள் குளிப்பதற்குப் பயன்படுத்தி வருவதனால், இந்தக்குளத்திலிருந்து நீரினைப்பெறுவதற்கு மக்கள் தடுத்து வருகின்றனர்.

இதனால், இந்தக்குளத்திற்குச் சமீபமாக உள்ள வயல்களில் சிறுதானியப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

# பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பிறந்த தினமும், நூல் வெளியீடும்!

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் 105 ஆவது பிறந்ததின விழாவும், நூல் வெளியீடும் நேற்று யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், திருமுறை ஓதலை தேவார இசைமணி தாவடியூர் ஆர். திருஞானசம்பந்தன் நிகழ்த்தினார். வரவேற்புரையினை பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை வே.தனபாலசிங்கமும், திருஞானசம்பந்தர் ஆதின நல்லைக்குருமணி அருளுரை நிகழ்த்தினார். அத்துடன், முனாள் கல்விப்பணிப்பாளர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் நூல் வெளியீட்டு உரையினையும் நிகழ்த்தினார்.

முதற்பிரதியினை கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவில் பரிபாலனசபைத் தலைவர் செல்லப்பா நடராசா பெற்றுக்கொண்டார். நயப்புரையினை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசும், பண்டிதர் ச.சிதம்பரப்பிள்ளையும், சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளையும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் சைவக் கல்விமான்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா விபத்தில் இளைஞன் காயம்!

(யாழ்ப்பாணம்)

வவுனியா - உயிலங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தின் போது 20 வயதான நிமலன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - வீதியில் சென்று கொண்டிருந்த பஸ்ஸை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில், மோட்டார் சைக்கிளில் வந்தவர் கீழே வீழ்ந்துள்ளார்.

இதனால், பஸ்ஸின் சில்லு ஒன்று அவரின் கைமீது ஏறியதால் கையில் படுகாயமடைந்தார்.

உடனடியாக மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (தீ)

ராஜா யாழ்ப்பாணம்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 01 ஆம் திகதி வரை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2623)



நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
சூர்யா, மாதவன், மீராஜாஸ்மின், ஈஷா நடித்த
ஆய்த எழுத்து
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-2622)



நிறஞ்சனாஸ் சங்கானை
முரளி, கௌசல்யா நடித்த
காலமெல்லாம் காதல் வாழ்க
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHPOSURE (சி-2621)

கலாலயா
பயிற்சியகம்
பதிவு இல - 16020
யாழ்ப்பாணம்.
மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்
3 மாத கால
✤ கேக்ஐஸிங் ✤ கூந்தல் அலங்காரம்
✤ மனையியல் ✤ FABRIC PAINTING வகுப்புக்கள்
இத்துடன் இரு நாள்களுக்கான அடிப்படை FACIAL அழகுக்கலை வகுப்புக்கள்
6 மாத கால
✤ உடை தைத்தல், மலர்கள் செய்தல், கைப்பணி வகுப்புக்கள்.
கிழமை நாள்கள் மற்றும் சனி, ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு மாணவிகள் அனுமதிக்கப்படவுள்ளனர்.
மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப. 1.00 மணிவரை அறிந்து கொள்ளலாம்.
- பதிவாளர்.
(சி-2707)

உடனடி வேலை வாய்ப்பு
தமிழீழ தேசியத் துணைப்படை
தமிழீழம்
தமிழீழ தேசியத் துணைப் படைக்கு உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் முகமாக தமிழீழப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
1. வயதெல்லை :- 18 தொடக்கம் 25 வரை
2. உடற்தகமை :- தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம் :- ரூபா 8500/= மாதமொன்றிற்கு
விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 23.06.2004 தொடக்கம் 30.06.2004 வரை சமூகம்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்
குறிப்பு:- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்
(சி-2685)



அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜை - கடற்படைத் தளபதி தயா சந்தகிரி வொஷிங்ரனில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

# கொழும்பு நகரின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஆலோசனை!

## இராணுவ புலனாய்வுத்துறை வழங்கியது

(கொழும்பு)

கொழும்பு நகரில் அமைந்துள்ள 17 முக்கிய அரச நிறுவனங்களின் பாதுகாப்பை உடனடியாக அதிகரிக்குமாறு, இராணுவப் புலனாய்வுத்துறை, பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

புலனாய்வுத்துறையின் தகவலின் அடிப்படையில் - பாதுகாப்பு அமைச்சுக்கு அழைக்கப்பட்ட இந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு புலனாய்வுப் பிரிவின் மூலம் கிடைத்த அறிக்கை குறித்து தெளிவாக்கப்பட்டது.

தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்பிற்கு மேலதிகமாக விசேட படையணிகளுக்குரிய அதிகாரிகளையும், இந்த நிறுவனங்களின் பாதுகாப்பில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவின் மூலம் கிடைததுள்ள அறிக்கைக்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் சிவில்பிரிவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் கடமையில் ஈடுபடுத்த பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விடுதலைப் புலிகளின் நடவடிக்கைப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட - அரச நிறுவனங்கள் குறித்த விசேட திட்டம் இராணுவப் புலனாய்வுத்துறைக்குக் கிடைத்துள்ளது.

எனவே, கொழும்பு நகரின் பாதுகாப்புமிகக் குறைந்தளவாகக் காணப்படுவதால், அவற்றின்பால் விடுதலைப் புலிகளின் கவனம் திரும்புவதற்கு சாத்தியமுள்ளது.

ஆகவே, இந்தப் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு பாதுகாப்புச் சபையால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, விமானப்படைத் தலைமையகம், இராணுவத் தலைமையகம், பொலிஸ் தலைமையகம், கடற்படைத் தலைமையகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை மின்சார சபை, துறைமுகம், விமான நிலையம், சப்புகஸ்கந்த மற்றும் கொலன்னாவ எண்ணைக் களஞ்சியத் தொகுதிகள், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம், ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகை போன்ற முக்கிய பல இடங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த அரச நிறுவனங்களின் புதிய பாதுகாப்புத் திட்டம் அடுத்த வாரம் தொடக்கம் நடைமுறைப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நாடாளுமன்ற ஜனநாயகத்தை சீர்குலைக்கிறார் ஜனாதிபதி!

## ரணில் விக்கிரமசிங்க சாடல்



(கொழும்பு)

ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் புதிய அரசியற் கலாசாரத்தை, தற்சமயம் நாடாளுமன்றத்தில் அவர்கள் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து மக்கள் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தங்காலையில் இடம்பெற்ற மக்கள் நிகழ்வொன்றில் பங்கேற்ற அவர், 1980 ஆம் ஆண்டு காலப்பகுதயில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிலைநாட்ட உதவியதை நினைவுபடுத்தினார்.

ஆனால், இன்று அவரின் வழியில்வந்த ஜனாதிபதி ஜே.வி.பியுடன் இணைந்து நாடாளுமன்றத்தின் ஜனநாயகத்தை சிதறடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# 18 வயதுக்கு குறைந்த யாரையும் புலிகள் இயக்கத்தில் சேர்ப்பதில்லை

## கௌசல்யன் தெரிவிப்பு

பதினெட்டு வயதுக்கு குறைந்த எவரையும் தமது இயக்கத்தில் போராளியாகச் சேர்த்துக்கொள்வதில்லை என்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தற்போதும் சிறுவர்களை தமது இயக்கத்தில் சேர்த்துவருகின்றனர் என்று யுனிசெவ் தெரிவித்த குற்றச்சாட்டையடுத்து, கருத்து தெரிவித்தபோதே, கௌசல்யன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எமது இயக்கத்தில் சேரவரும் சிறுவர்களை யுனிசெவ் ஊடாகவும், நேரடியாகவும் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்து வருகிறோம்.

கடந்த புதன்கிழமை, அம்பாறை மாவட்டத்தில் யுனிசெவ்விடம் ஆறு சிறுவர்களை ஒப்படைத்துள்ளோம். நாளை மேலும் மூன்று சிறுவர்களை மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஒப்படைக்க இருக்கிறோம்.

எமது இயக்கத்தில் சிறுவர்கள் இருப்பதாக யுனிசெவ் அமைப்பு கருமளவில் அதுபற்றிய விபரங்களைத் தந்தால் ஆராயப்படலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மக்களின் குரலை வெளியுலகிற்குக் காட்ட எழுச்சிப் பேரவை பங்காற்றவேண்டும்!

## பேரவையின் சங்கம நிகழ்வில் எழிலன்

எமது மக்களின் ஆத்மார்த்தமான குரலை வெளியேகொண்டுவர தேசிய எழுச்சிப் பேரவை தமது பங்களிப்பை நிறைவாக ஆற்றவேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் திருகோணமலை சம்பூர் கிழக்கு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர் -

எமது மக்கள் தங்களது கிராமங்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள ஏற்றசூழல உருவாக்கப்பட வேண்டும். எமது தேசிய விடுதலையில் மக்களின் பங்களிப்பு அளப்பரியது.

கடந்த காலங்களில் விடுதலைப் பயிருக்கு உரமூட்டியவர்கள் எமது மக்களே. எனவே, நெருக்கடிமிக்க இக்காலப்பகுதியிலும் சரியான இலக்கினை நோக்கி நேர்த்தியாக நடைபோடவேண்டிய தேவை உள்ளது.

எனவே எமது தாயக மக்களின் ஆத்மார்த்தமான குரலை வெளியுலகிற்குக் கொண்டுவர தேசிய எழுச்சிப்பேரவை தமது பங்களிப்பை நிறைவாக ஆற்றவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணிமுதல் சம்பூர் தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரினை தேசிய எழுச்சிப் பேரவையின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் குட்டி ஏற்றிவைக்க, தமிழீழ தேசிய கொடியை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

மூதூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன் தலைமையில் நடந்த சங்கம நிகழ்வில், தேசிய எழுச்சிப் பேரவையின் மூந்நூறு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து வேலைத்திட்ட ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. மாவட்டத்தின் அனைத்து விடயப் பொறுப்பாளர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (10)

# திருமலை சேருநுவரவில் புலிகளின் புதிய முகாமாம்

## பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

(திருகோணமலை)

திருகோணமலை - சேருநுவர மாவிலாறு அணைக்கட்டுப் பிரதேசத்தில் புலிகள் புதிய முகாமொன்றை அமைத்துவருவதாகப் பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் தங்கியுள்ளதாகவும், அவர்கள பூநகரிப் பகுதிக்குச் சென்று அங்கிருந்து உணவுக்பொருட்களை புதிதாக அமைக்கப்படும் மேற்படி முகாமுக்கு கொண்டு செல்வதைப பார்த்து பொதுமக்கள் தமக்கு தகவல் தந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

கடந்த சிலநாட்களுக்கு முன்னர் இரண்டு பொதுமக்கள் இந்தப்பகுதிக்கு மின்பிறப்பாக்கி ஒன்றைக் கொணடுசென்றதாகவும், இதுகுறித்து தகவல் சேருநுவர பொலிஸ் பிரிவிற்கு கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

திருமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குள் புதிதாக புலிகள் முகாம்களை அமைத்துவருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

# காவல்துறை உறுப்பினர் திருமலையில் கைது!

திருகோணமலை மகிந்தபுர சோதனைச்சாவடியில் தமிழீழ காவல் துறையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

மூதூரிலிருந்து வெருகல் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியில் பயணஞ்செய்த காவல்துறை உறுப்பினர் தடைசெய்யப்பட்ட தொடர்பாடல் கருவிகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே கைது செய்யப்பட்டார் என படையினர் தெரிவித்தனர்.

## சமாதான முயற்சிகள் குறித்து

# அரசாங்கம் -புலிகள் இடையே தொடர்ந்து செய்திப் பரிமாற்றம்

## அரச சமாதானச் செயலகம் கூறுகிறது

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னகர்த்திச் செல்வதற்கு, அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்ச்சியாக செய்திப்பரிமாற்றம் இடம்பெற்றுவருவதாக அரச சமாதானச் செயலகம் தெரிவித்தது.

சமாதானப் பேச்சுவார்தையை முன்னகர்த்திச்செல்வதற்கு தற்போது நிலவும் குறைபாடுகள் தொடர்பாக அரசு மற்றும் விடுதலைப்புலிகளுக்கு இடையே உடன்பாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் இன்று கொழும்பிற்கு வரவிருக்கிறார்.

கொழும்புவரும் சொல்ஹெய்ம் - அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்த பின், எதிர்வரும் 30 ஆம் திகதி கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளதாகவும் சமாதான செயலகம் தெரிவித்தது.

விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பாக அந்த அமைப்புடன் பேசுவதற்கு அரசு தயாரெனவும்,

அத்துடன் இறுதித் தீர்வு தொடர்பாக கலந்துரையாடப்படுமெனவும் சமாதான செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார்.

# அமெரிக்கா - இலங்கை இணைந்து செயற்படலாமாம்

பயங்கரவாத செயல்களைக் கட்டுப்படுத்துவதிலும், நிதிமோசடிகள் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப் படுவதைக் கட்டுப்படுத்துவதிலும் அமெரிக்காவும், இலங்கையும் இணைந்து செயற்படலாமென்று அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை 60 விசேட சுங்க அதிகாரிகள் பயிற்சிபெற்று வெளியேறிய வைபவமொன்றில் கருத்துரைத்த அமெரிக்கத் தூதுவர், போதைவஸ்து கடத்தலுக்கு எதிராகவும் இலங்கையுடன் இணைந்து செயற்படமுடியுமென்றும் குறிப்பிட்டார்.

இந்தப் பயிற்சிக்கென 500 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அமெரிக்காவால் உதவித் தொகையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இதுவரை கடமையை பொறுப்பேற்காத வைத்தியர்களுக்கு சம்பளம் நிறுத்தம்!

(கொழும்பு)

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் வெளிமாவட்ட வைத்தியசாலைகளுக்கு இடமாற்றியும், அங்கு செல்லாது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் 150 வைத்தியர்களுக்கு வேதனம் வழங்குவதை சுகாதார அமைச்சு இடைநிறுத்தியுள்ளது.

இந்த வைத்தியர்கள் வருடாந்த இடமாற்றத்தின்கீழ் அநுராதபுரம், பொலநறுவை, மஹியங்கனை, மொனராகல, அம்பாறை உட்பட கஷ்டப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படுத்தும் விதமாக இடமாற்றப்பட்டிருந்தனர்.

ஆயினும் இந்த வைத்தியர்கள் இடமாற்றிய வைத்தியசாலைகளுக்கு செல்லாமல் தேசிய வைத்தியசாலையிலேயே தங்கியுள்ளமையால் வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு இடமாற்றம் பெற்ற வைத்தியர்கள் கடுமையான நிலைக்கு உட்பட்டனர்.

இவ்வாறு இடமாற்றம் பெற்றுச் செல்லாத வைத்தியர் அனைவரும் நான்கு வருடங்கள் தேசிய வைத்தியசாலைகளில் சேவை புரிந்ததுடன், அவர்களில் விசேட பதவிகளை வகிக்கும் வைத்தியர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தவருடம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 200 வைத்தியர்களுக்கு இடமாற்றம் கிடைத்துள்ளதாகவும் இவர்களில் 50 வைத்தியர்களே வேறு வைத்தியசாலைகளுக்குச் சென்றுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சுவீடன் அணியினை வீழ்த்தியதன்மூலம் அரையிறுதிக்குள் நுழைந்தது ஹொலன்ட்



போர்த்துக்கல் நாட்டில் நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சுவீடன் அணியை வீழ்த்தி ஹொலன்ட் வெற்றிபெற்றது.

இதன் மூலம் அரையிறுதிப் போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை சுவீடன் இழந்தது.

ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் கடந்த 24 ஆம் திகதி தொடங்கியது. முதல் கால் இறுதியில் போர்த்துக்கல் 6 - 5 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தையும், 2 ஆவது கால் இறுதியில் கிரீஸ் 1 - 0 என்ற கோல் கணக்கில் பிரான்சையும் தோற்கடித்தன.

3வது கால் இறுதி ஆட்டம் பாரோலவ்லி நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் 'சி' பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த சுவீடன்



'டி' பிரிவில் 2 ஆவது இடத்தைப் பிடித்த ஹொலன்ட் அணிகள் மோதின.

இரு அணி வீரர்களுமே துடிப்புடன் ஆடியதால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஆட்டம் தொடங்கிய 10வது நிமிடத்தில் ஹொலன்ட் அணிக்கு கோல் அடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ரோபென் அடித்த பந்து கோல் கம்பத்துக்கு சற்று வெளியே சென்றது.

இதேபோல அந்த அணியைச் சேர்ந்த நிஸ்டல் ருயுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதை அவர் தவறவிட்டார்.

முதல் பகுதி ஆட்டத்தில் ஹொலன்ட் வீரர்களின் தாக்குதல் ஆட்டம் அபாரமாக இருந்தது. 30 ஆவது நிமிடத்தில் அந்த அணியைச் சேர்ந்த பிராங்டி போயர் நடுவரால் எச்சரிக்கப்பட்டார்.

2 ஆவது பகுதி ஆட்டத்தில் சுவீடன் வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. லார்சன், இப்ராகிம்மோவிக் ஆகியோர் ஹொலன்டுக்கு நெருக்கடி கொடுத்தனர். ஆட்ட நேரம் முடியும்வரை இரு அணிகளுமே கோல் ஏதும் போடவில்லை.

இதனால், மேலதிக நேரம் கொடுக்கப்பட்டது. மேலதிக நேரத்தில் முதல் 15 நிமிடத்தில் எந்த அணியும் கோல் அடிக்காததால், 2 ஆவதாக மீண்டும் 15 நிமிடம் கொடுக்கப்பட்டது. இதிலும் கோல் விழவில்லை. மேலதிக நேரத்தில் இரு அணிகளுககும் கோல்போட பல வாய்ப்புக் கிடைத்தது. இதை அவர்கள் வீணடித்து விட்டனர்.

மேலதிக நேரத்திலும் கோல் விழாததால் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி சொட் கடைப்பிடிக்கப்பட்டது.



பெனால்டி சொட்டில் ஹொலன்ட் அணி 5-4 என்ற கோல் கணக்கில் சுவீடனைத் தோற்கடித்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

பெனால்டி சொட்டில் ஹொலன்ட் தரப்பில் ரூட்வான் நிஸ்டல் ரூய், ஜோன் ஹெடிங்கா, மைக்கேல், ராய் மக்காய், ரோபென், ஆகியோர் கோல் அடித்தனர். சுவீடன் தரப்பில் காஸ்ஸ்டிரோம், லார்சன், பிரடறிக், கிறிஸ்டியன், ஆகியோர் கோல் அடித்தனர்.



இந்தப் போட்டியில் சுவீடனின் கதாநாயகனாகத் திகழ்ந்த இப்ராகிம்மோவிக் வில்லனாக மாறினார். அவரும், கப்டன் மெல்பெர்க்கும் கோல் வாய்ப்பைத் தவறவிட்டனர். ஹொலன்ட் அணியில் பிலீப் கோல்க் கம்பத்துக்கு வெளியே அடித்தார். இப்ராகிம் மோவிக் அடித்த பந்து கோல்க் கம்பத்துக்கு மேலே சென்றது. மெல் பெர்க் அடித்த பந்தை ஹொலன்ட் கோல் கீப்பர் எட்வின் வான்டர் தடுத்துவிட்டார். ஹொலன்ட் அணியின் வெற்றிக் கோலை ரோபன் அடித்தார். இந்த போட்டியைப் பார்வையிட சுமார் 30 ஆயிரம் ரசிகர்கள் அரங்கில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஐரோப்பிய காலிறுதிப் போட்டியில் கடைசிக் கால் இறுதி ஆட்டம் போர்ட்டோ நகரில் இன்று நடைபெறும். இதில் 'டி' பிரிவில்



முதல் இடத்தைப் பிடித்த செக்குடியரசு-'சி' பிரிவில் 2 ஆவது இடத்தைப் பிடித்த டென்மார்க் அணிகள் மோதுகின்றன.

விளையாட்டு

# விம்பிள்டன் ரெனிஸ் போட்டி மிஸ்கினா அதிர்ச்சித்தோல்வி

விம்பிள்டன் ரெனிஸ் போட்டியின் 3 ஆவது சுற்றில் 2 ஆம் நிலை வீராங்கனை மிஸ்கினா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில், சமீபத்தில் பிரான்ஸ் ஓபன் 'சம்பியன்' பட்டம் வென்ற அனஸ்டாசியா மிஸ்கினா (ரஷ்யா) அமெரிக்காவின் அமெய் பிரைசியரை எதிர்கொண்டார்.

இதில் 2 ஆவது நிலை வீராங்கனையான மிஸ்கினா 6:4, 4:6, 4:6, என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறினார்.



2ஆவது சுற்றில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6 - 0, 6 - 4 என்ற நேர் செட்டில் ஸ்டீபன் பொரெட்சை (பிரான்ஸ்) தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இவானி செவிக் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3 ஆவது சுற்றில் கோரன் இவானி செவிக் (குரோஷியா) 2 - 6, 3 - 6, 4 - 6, என்ற செட் கணக்கில் லெய்டன் ஹெவிட்டிடம் (அவுஸ்ரேலியா) தோல்வி கண்டு வெளியேறினார்.

2 ஆவது சுற்றில் குல்லெர்மோ கோ்யா தோல்வி அடைந்தார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் முதற் சுற்றில் லியாண்டர் பயஸ் (இந்தியா) - டேவிட் ரிகில் (செக்குடியரசு) ஜோடி 7 - 5, 6 - 7, 6 - 3 என்ற செட் கணக்கில் இத்தாலியின் டானிலெ - ஜோர்ஜியோ ஜோடியைத் தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றது. மழை காரணமாக நேற்று முன்தினம் ஆட்டம் பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத் தீவுகள் - நியூஸிலாந்து

# அணிகளுக்கிடையிலான போட்டியும் மழை காரணமாக கைவிடப்பட்டது!

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் தொடரின் முத்தரப்பு ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் - நியூஸிலாந்து அணிகளின் போட்டி நேற்று மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது.

காலநிலை சீரின்மையால் ஓவர்களின் எண்ணிக்கை முதலில் 35 ஆகக் குறைக்கப்பட்டது. மீளவும் 21 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 21 ஓவர்களில் மேற்கிந்தியத்தீவுகள் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாரா 22 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றார். அதிலும் ஜேக்கப் ஓரத்தின் ஒரு ஓவரில் லாரா - அனைவரும் வியக்கத்தக்க வகையில் 23 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதன் பின் நியூஸிலாந்து அணி துடுப்பாட்டத்தில் இரண்டு விக்கெட்டுக்களை



இழந்து 97 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கிட்டது.

இதையடுத்து, மேலும் விளையாட முடியாத காரணத்தால் - ஆட்டம் கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா மூன்று புள்ளிகள் வழங்கப்பட்டன.

# கே.சி.சி.சி. கிண்ண காலிறுதிப் போட்டி; யங்ஸ்ரார், பற்றீசியன் அணிகள் வெற்றி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி தம்மை எதிர்த்து விளையாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் கழக அணி 28.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்த அணியின் சார்பில் ஜொனிற்றன் 49, விஜயகர்ணன் 42, தினேஷ் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில், சாத்வீகன் 3 விக்கெட்டுக்களையும், ஜெயதீபன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்துப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் 27.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வி அடைந்தது.

இந்த அணியின் சார்பில் துடுப்பெடுத்தாடிய ஜெயகாந்தன் 54, கிஷோகுமார் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

யங்ஸ்ரார் அணி சார்பில் பந்து வீசிய சசிவர்ணன், தினேஷ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், கிருஸ்ணச்சந்திரா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இன்னொரு காலிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது. இதில் ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய பற்றீசியன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவாகளில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜெனன்ராஜ் 69, லொயிட் 33, சுதர்சன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓல்ட் கோல்ட் அணியினர் சார்பில் மதியழகன், பிரதீவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஓல்ட் கோல்ட் அணியினர் 26.3 ஓவர்களிலேயே சகல விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியடைந்தனர்.

இந்த அணியின் சார்பில் துடுப்பெடுத்தாடிய செந்தூரன் 20, ரூபன் 18, நிரோசன் 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் பற்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பில் விநோதன் 4 விக்கெட்டுக்களையும், தயாளன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## மாகாண மட்ட உதைபந்தாட்டம்:

# யாழ்.மாவட்ட வீரர் ஜேசுதாஸ் 4 கோல்கள் அடித்துச் சாதனை

(வவுனியா)

வட - கிழக்கு மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் 9 மணிக்கு ஆரம்பமாகின.

இந்தப் போட்டியில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் கலந்துகொண்டன.

மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதலிங்கம், வட - கிழக்கிற்கான விளையாட்டுத்துறைப் பணிப் பாளர் ஏ.நிமல்ராஜ், மன்னார் பிரதேச செயலர் ஆர்.வரதேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண் டனர்.

முதல்நாள் ஆட்டம் வவுனியா - முல்லைத்தீவு மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்றது. போட்டியில் வவுனியா அணியை முல்லைத்தீவு அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து யாழ்.மாவட்ட அணிக்கும் அம பாறை மாவட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாண அணி 5 கோல்களைப் போட்டு அம்பாறை அணியை வெற்றிபெற்றது.

யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த ஜேசுதாஸ் நான்கு கோல்களைப் போட்டு சாதனை நிலைநாட்டினார். தொடர்ந்து மட்டக்களப்பு, மன்னார் மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் இரு அணியும் கோல்களைப் போடாததையடுத்து பெனால்டி முறையில் மட்டக்களப்பு மாவட்ட அணி, மன்னார் மாவட்டஅணியை 5:3 கோல்களால் வெற்றி பெற்றது.

பின்னர், திருகோணமலை மாவட்ட அணிக்கும், முல்லைத்தீவு மாவட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முல்லைத்தீவை, திருகோணமலை இருகோல்களால் வெற்றிபெற்றது. (201)

# குடாநாட்டில் மாடுகளுக்கு கால்வாய் நோய் அபாயம்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் மாடுகளுக்கு கால்வாய் நோய் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கால்நடை சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் மாடுகளுக்கு பரவியுள்ள கால்வாய் நோய் தற்போது தென்மராட்சிப் பிரதேசத்திற்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் குடாநாட்டில் ஏனைய பகுதிகளான வடமராட்சி, வலிகாமம், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள மாடுகளுக்குப் பரவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் மாட்டுப் பண்ணையாளர்கள் மாடுகளை கட்டி வளர்க்குமாறு கால்நடை சுகாதாரத் திணைக்களம் மாடுவளர்ப்போரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (17)

## சித்த ஆயுர்வேத மருந்தகத்திற்கு கொழும்பிலிருந்து மருந்துகள்

(உடுவில்)

வலி. வடக்குப் பிரதேச சபையினால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத சிகிச்சை நிலையத்திற்கு கொழும்பிலிருந்து மருந்துகள் அனுப்பப்பட்டுள்ளன.

சளி, முட்டு, வாதம், சருமவியாதி போன்ற சகலவித ரோகங்களுக்குமான மருந்துகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் நோயாளர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாமென சித்த ஆயுர்வேத வைத்தியர் தெரிவித்தார். (101)

# மருதங்கேணி கோட்ட பாடசாலை மாணவருக்கு ஜூலை மாதம் முதல் சத்துணவு வழங்க ஏற்பாடு

மருதங்கேணிக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படவுள்ள காலை உணவு எதிர்வரும் ஜூலைமாத இறுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை, வடமராட்சி வலயப் பிரதிக்கல்வி பணிப்பாளர் சி. நந்தகுமார், கணக்காளர் எஸ். சந்திரசேகரம், யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன், பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், கிராம அலுவலர்கள், பொதுச் சுகதாதாரப் பரிசோதகர்கள் மற்றும் உலக உணவுத்திட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தில், யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட போதும், மருதங்கேணிக் கோட்டத்திலேயே முதலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கு காலை 10 மணிக்கு உணவு வழங்கப்படவுள்ளது. (122)

# கட்டாக்காலிகளை அழிப்பதற்கு உள்ளூராட்சி வாரத்தில் ஏற்பாடு

(சுதுமலை)

வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதியில் திரியும் அனைத்து நாய்களும் அழிக்கப்படும் எனவும் உரியவர்கள் நாய்களைக் கட்டி வளர்க்குமாறு பிரதேசசபை, கோரிக்கை விடுத்துள்ளது.

விசர்நாய்க் கடிக்குள்ளாகி பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இந்தப் பிரதேசங்களில் 50 வீதமான நாய்ககளுக்கே உரிமையாளர்களால் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. (91)

# கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட செயலக திணைக்களக் கேள்விச் சபையின் தலைவரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் உறுப்பினர்களிடம் இருந்தும் கீழ்வரும் அட்டவணை பிரகாரம் உள்ள வேலைகளுக்கான கேள்வி கோரப்படுகின்றது.

01. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை 05.07.2004 தொடக்கம் 12.07.2004 வரை மாவட்ட செயலகம், கிளிநொச்சியில் இலவசமாக பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

02. அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்வி பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 19.07.2004ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச் சபை,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி,

அதே தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமூகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட நாளில் அலுவலகம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

| கேள்விக் குறியீட்டு இல. | வேலை விபரம் | கேள்விப்பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| N/DPS/UNICEF/ W/01 | பிரசவ விடுதி அமைத்தல், சுற்றயல் கூறு மருத்துவமனை பூநகரி | 266000/- | 1000/- | 06 மாதங்கள் |
| N/DPS/UNICEF/ W/02 | பிரசவ விடுதி புனரமைத்தல், மத்திய மருந்தகம் வேரவில் | 62500/- | 1000/- | 04 மாதங்கள் |
| N/DPS/UNICEF/ W/03 | பிரசவ விடுதி புனரமைத்தல் தர்மபுரம் மத்திய மருந்தகம் | 30000/- | 1000/- | 04 மாதங்கள் |
| N/DPS/UNICEF/ W/04 | பிரசவ விடுதி புனரமைத்தல் மத்திய மருந்தகம் உருத்திரபுரம் | 96500/- | 1000/- | 04 மாதங்கள் |
| N/DPS/UNICEF/ W/05 | பிரசவ விடுதி புனரமைத்தல் வட்டக்கச்சி மத்திய மருந்தகம் | 26500/- | 1000/- | 04 மாதங்கள் |
| N/DPS/UNICEF/ W/06 | சிறுவர் விடுதி புனரமைத்தல் சுற்றயல்கூறு மருந்துவமனை ~ பளை | 66500/- | 1000/- | 04 மாதங்கள் |

இதற்கான விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் யாவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.இராசநாயகம்,**
தலைவர்,
கிளி. மாவட்ட செயலக கேள்வி சபை,
அரச அதிபர்

(சி-2702)

## தேர்தல் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(ஆழியவளை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் தேர்தல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் தமது கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிமனை அறிவித்துள்ளார். (122)

## சாரணர்களுக்கு பயிற்சி

(ஆழியவளை)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் 2ஆம் திகதி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குகொள்ளும் சகல சாரணர்களும் சீருடையுடன் சமூகம் கொடுக்க வேண்டுமென மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (122)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : கீ. சந்தியா
முகவரி : இணுவில் மேற்கு, சுன்னாகம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-----------------------
-----------------------
முகவரி :-----------------------
-----------------------
பிறந்த ஆண்டு:-----------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றோர் ஒப்பம்

கலாசரம்



சிறுகதை

# மாட்டு வண்டில்

தில்லை நம்பி

இது நடந்து இப்ப நாலு மூண்டு வருசம் இருக்கும். இப்பவும் என்கண்முன்னே நிழற்படமாய் ஓடுது. அப்பநான் ரியூசனுக்குப் போட்டு வீட்ட கால்வைக்கவே அப்பாவுக்கும், அம்மாவுக்கும் வாககு வாதம் கொஞ்சம் சூடாகத்தான் நடைபெற்றது. இப்ப ஏனப்பா உதை எடுத்த நீங்கள் காசு கையில் கிடைக்குதெண்டா ஒரு ஆட்டோவ வாங்கியிருக்கலாம். இல்லாட்டி அதுக்கும் இப்ப என்ன அவசரம் பாங்கில போட்டா பிள்ளையின்ர பெயரில இருக்கும். பிள்ளைக்கு கல்யாணம் சடங்கு எண்டாலும் தேவைப்படும். இப்ப உது தேவையோ? எண்டு அம்மா தனது நியாயத்தைச் சொன்னார். இல்ல இது தேவையில்லாட்டி நான் நாளைக்கே இதைக் கொண்டு போய் வேண்டினவனிட்ட கொடுத்திட்டு காசை வாங்கிக் கொண்டு வரப்போறன் என அப்பா தனது கருத்தைக் கூறினார். உமக்கென்ன விசரே இண்டைக்கு வேண்டிப்போட்டு நாளைக்குக் கொடுத்தா உம்மை என்ன நினைப்பினம். கேட்டுக் கேள்வி இல்லாமல் செய்யிறது. பிறகு மூக்குக்கு மேல் கோபம் வந்தவுடன் உப்பிடித்தான் கதைபபியள் என்றார் அம்மா. உடனே நான் வீடு வந்ததற்கறிகுறியாக இரண்டு தரம் இருமி உங்க என்ன நடக்குது என்பது போலக் கேட்டன். இந்த வயதிலையும் அம்மா அப்பாவுக்கு எவ்வளவு மரியாதை கொடுத்து நீர் போட்டுக் கதைப்பதை நினைத்து, என் மனம் அவர்கள் மேல் மேலும் பாசமாய் இருந்தது.

இப்ப என்ன நடந்தது எண்டு இரண்டு பேரும் சண்ட போடுறியள் என்று அவர்கள் பக்கம் சென்றவுடனேயே அப்பா அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டிருந்தார். இப்படித்தான் எங்கடை வீட்டை சண்டை வரும். பக்கத்து வீட்டுக்காரருக்கே தெரியாது. ஆனா அப்பாவும் அம்மாவும் ஓரிரண்டு நாளுக்குக் கதைக்கமாட்டினம் பிறகு எல்லாம் முடிவுக்கு வந்துவிடும். எட தம்பி இதைக் கேள் கொப்பர் ஒரு மாட்டு வண்டில் மாட்டோடு சேர்த்து வாங்கி னவர். வெறும் வண்டில் மட்டும் இருபத்தையாயிரம். பிறகு ஒரு சோடி மாடும் இருபதாயிரம் ரூபாய் உதை ஏன் அவுட்டவர் எண்டு கேட்டன் இஞ்சதான் எது எடுத்தாலும் சண்டை தானாம் என்று என்னோட கோபிக்கிறார். எட தம்பி இதையொருக்கா நீ



சொல்லு இதுகள் இப்ப தேவையோ மனுசன்ர கையில காசு கிடந்தா சும்மா இருக்காது என என்னிடம் தனது வாக்குமூலத்தை ஒப்பித்தார்.

இப்படித்தான் இது நடக்குறதுக்கும் மூன்று மாதத்துக்கு முன்னர் அப்பா ஒரு றேடியோ வாங்கி வந்தார். அதற்கும் ஒரே சண்டை. கிடக்கிற றேடியோ பத்தாதெண்டு மனிசன் இந்தப் பெரிசக் கொண்டு வந்து இஞ்சவச்சுக்கிடக்கு பிள்ளையின்ர படிப்புக்கெட்டுது. ஒருத்தரும் உந்த றேடியோ கேக்கக்கூடாது, போடக்கூடாது கொப்பர் மட்டும் போட்டுக் கேட்கட்டும். எங்களுக்குப் பழைய றேடியோ கிடக்கு. நாங்கள் எல்லாரும் அதைப்பாவிப்பம் என அம்மா ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் எடுத்தது போல் உறுதியுடன் கூறி முடித்தார். அது நடந்து மூண்றுமாதமாகவில்லை. அடுத்த பிரச்சினை நான் அனைத்தையும் கேட்டுக் கொண்டு நின்றுவிட்டு அம்மா இப்ப பொருளாய்க் கிடக்குத்தானே கிடக்கட்டும் விடுங்கோ. காசு என்றால் கையில கிடந்தாலும் கரைஞ்சிடும் தானே இப்ப இதுக்குப்போய் ஏன் சண்டை கொஞ்ச நாளெண்டாலும், கொண்டுவந்ததற்காக எண்டாலும் இஞ்ச கிடக்கட்டும் பிறகு யாராவது கேட்டால் கொடுப்பம் எனச் சம்மதம் தெரிவித்து தீர்ப்பு வழங்கினேன். இதில் என்ன மகிமையெண்டா எனக்கும் மாட்டு வண்டில் ஓட்டவேணும் எண்டு, அதுவும் சகலகலாவல்லவனில வாற கமலகாசனைப் போல ஓட்டவேணும் எண்டுதான் ஆசை, நான் நினைச்சிருந்தா அம்மாவோட சேர்ந்து அந்த வண்டில் தேவையில்லை எண்டு அப்பாவுக்குப் பக்கத்தில் நிண்டு கறையான் அரிச்ச மாதிரி அரிச்சிருந்தால் இரவோடு இரவாக வண்டிலும் மாடும் ஏன் அப்பாவும் கூட காணாமல் போயிருப்பார்.

வண்டில் எடுத்த புதிசில கொடிகாமப் பக்கம் கொண்டுபோய் கிடுகு ஏத்திக்கொண்டு வருவம் எண்டு நினைச்சு இரண்டு பழசுகளுடன் நானும் ஒரு புதிசாய் போனன். போகேக்க ஒரு வாளி, லாம்பு சகிதம் கட்டைகள், கயிறுகளுடன் பரிவாரங்களுடன் புறப்பட்டோம். இரவிலயே எங்கட பயணம் துவங்கிச்சிது. லாந்தர் விளக்கை கந்தப்பு ஐயா ஏற்றி வண்டிலின் அச்சில் தொங்க விட்டு விட்டு மாடுகளுக்கு வழிகாட்டியாக முன் நடந்தார். இதுகளை நினைக்கும் போது எனக்குச் சின்ன வயதில் பாட்டி சொன்ன கதை ஞாபகத்திற்கு வந்தது. இரவில கடகடவெனச்சத்தம் கேட்கும், றோட்டால வெளிச்சம் தெரியுமாம், முனி போகுமாம், ஆறாவது தெருவில அம்பிட்டால் அடிச்சுப்போடுமாம், இதன் சூட்சம் இப்பதானே எனக்கு தெரிஞ்சுது. கிடுகு மாட்டு வண்டிலில ஏத்தினதில லாபமோ, நட்டமோ எனக்குத் தெரியாது ஆனா அது எனக்கு ஒரு பட்டறிவாய் போச்சுது.

இந்த வண்டில் வாங்கிக் கொஞ்சக் காலத்துக்குப் பிறகு இடிமுழக்கம் துவங்கி பிறகு சூரியக்கதிராய் மாறிட்டுது. ஆனாலும் ஒவ்வொரு விநாடியும் என்ன நடக்கும், எங்கு இருப்பம் எண்டு தெரியாது. இருந்தாப் போல பின்னேரக்கையா ஆட்டோவில சில பெடியள் ஏறி எல்லாரையும் தென்மராட்சிக்குப் போகட்டாம் எண்டு அவசர அறிவிப்பாய் சொன்னாங்கள். நாங்களும் வண்டிலில ஏத்தக்கூடியதை ஏற்றிக்கொணடு சாவகச்சேரிப்பக்கம் போனம். பிறகு கொடிகாமம், வரணியில இருந்தம். அங்க போன புதிசில சாப்பாட்டுக்கே பெரிய கஷ்ரப்பட்டம். வரணி என்றபடியால் சில பொழுதுகள் தேங்காயுடன் மட்டுமே கழியும். சோறு சாப்பிட்டதை விரல் எடுத்துத்தான் எண்ணவேணும். அப்படி ஒரு கஷ்ரம் சில வேளைகளில் மாட்டு வண்டிலே எங்களுக்கு வீடாக இருந்தது எண்டா உலகம் நம்பாது. பிறகு இரண்டொரு மாதம் பிரச்சனை இல்லை எண்டுற அளவுக்கு நானும் வண்டில் ஓட்டக் கற்றுக் கொண்டதால் தேங்காய் ஏற்றிச் சந்தையில் விற்பதும், வேறு எதுவென்றாலும் ஏற்றுவதும், பறிப்பதுமாக இருந்தது. உப்பிடித்தான் இருக்கேக்க வீட்டில் இருந்த எல்லா ருக்கும் திடீரென்று குலப் பனோட காச்சல். வண்டிலில தான் ஏத்திக் கொண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கொண்டே விட்டன். மலேரியாவாம். நல்ல காலம் வேளைக்கு வந்தபடியா நல்லதாம் இல்லாட்டி மண்ட மலேரியா வருமாம் எண்டு தான் வைத்தியர் சொன்னவர். இப்ப நினைச்ச நேரத்துக்கு எங்க ஆட்டோ வசு கிடைக்கும், எல்லாம் எங்கட அப்பாவை மனசில வைச்சு மாட்டு வண்டிலையும், மாட்டையும் நினைத் துருகுவன்.

திரும்பவும் கிளாலி கடந்து வன்னிப்பக்கம் செல்ல வேண்டி வந்தது. என்ன செய்ய வன்னிக்குப் போறதோ இல்லாட்டி திரும்பிப் போவதே எண்டு முடிவெடுக்க முடியாதநிலை. காரணம் மனுசன் இயங்குறதுக்கு இதயம் தேவையோ என்னவோ உண்மைதான். ஆனா எங்கட குடும்பத்தை இயக்கிறது இந்த மாட்டுவண்டில் தானே. இதை விட்டு விட்டு எப்படி வன்னிக்குப் போறது. அங்கால ஒருத்தரையும் தெரியாது. பாதையும் எப்படியோ எண்டும் தெரியாது. எண்டா இதையும் கொண்டுதான் போகவேணும் எதற்கும் வீட்டுக்காரரிட்ட கேட்டன் தம்பி உதில சனம் போகவே இடமில்ல உதுகளை என்னண்டு ஏத்துறது. பேசாமல் ஆருக்கொண்டாலும குடுப்பம். பிறகு வந்து வேண்டுவம் என்றா அம்மா. நான் எதுக்கும் நாளைக்கு சொல்லுறன் என்டன் கிளாலிப்பாதைக்காரங்



களோட கதைச்சன். ஒரு ஐயாயிரம் தேவைப்படும் எண்டாங்கள் இதை வீட்டை சொன்னா வீட்டுக்காரருக்கு 'காட்' நிண்டாலும் நிண்டிடும். என்ர பதினாறு வயதில் அம்மா எனக்குப் போட்ட ஒண்டரைப் பவுண் சங்கிலியே என் கண்ணில் வந்தது. உடனே அதை வித்துப் போட்டு அடுத்த நாளே வன்னிமண் தொட்டன் ஆனாலும் இந்தச் சீரழிந்த வாழ்க்கை வேண்டாம். நிம்மதியாய் வாழ வேணும். கிளிநொச்சி முறிப்பில ஒரு காணியெடுத்து இருந்தம். ஒரு ஏர்க்கலப்பையும் எடுத்தம் இப்ப பெரும்போகம், சிறுபோகம் எண்டு விதைக்கிறம். ஆனாலும் மரக்கறி கொஞ்சம் வைச்சு வண்டிலிலதான் ஏத்திப்பறிக்கிறது. இப்ப அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வண்டிலோட மாடும் நல்லாப் பிடிச்சுப்போச்சு. தம்பி உதை ஒருக்கா அவிட்டுக்கட்டு கொஞ்ச நேரம் எண்டாலும் புல்லப் பூண்டத் திண்டாப் பிறகு வேலையைச் செய் இப்படி நல்ல பாசமாய் போச்சு. திடீரெண்டு ஒரு நாள் சிவப்பன்மாடு வாயால நுரை தள்ளி செத்துப்போச்சு. வீட்டில இருந்த எல்லாரும் பழைய நினைவுகளைச் சொல்லிச் சொல்லியே அழுகினம். சிவப்பன் மாட்டுக்காண்டி வீட்டின் ஒரு மூலையில் சிலையே அம்மா வச்சு தினமும் பூப்போட்டு கும்பிடுவா. பிறகு அடுத்தநாள் காசு கொஞ்சம் தந்து நல்லமாடாய் ஒரு சோடி எடுத்து வா எண்டு என்னைத் துரத்துறா. என்னதான் இடம்பெயர்வு போர்சூழல் நெருக்கடி எண்டாலும் மனிசனுக்கு மட்டும் கஷ்ரம் இல்லை, வாயில்லா ஜீவன்களுக்கும்தான் ஆபத்து இதை அறிஞ்சோ, என்னவோ தேசம் விடியவோ என்னவோ, எங்கேயோ வானலையில் அந்தப்பாடல் 'சிவல மாடு கட்டியிருக்கிற சலங்கை உடையட்டும்' என்னும் வரி என்செவி எட்டவே தூரத்தில் ஆதவன் கதிர்பரப்பவும் முற்றத்துச் சேவல் சிறகடித்து கூவிற்று. பொழுது விடிவதற்காய் நாளையே நம்மூர் செல்ல வேண்டும். நற்செய்தி கொண்டு புது மாட்டு வண்டிலூடே, புன்னகையுடனே எம் மண்ணில்.

*

# எதையும் வரையறைகளோடு விளக்குவது மரபுக் கவிஞர்களின் பண்பாகும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதை அரசாட்சி செய்த காலம் ஒன்றுண்டு. உரைநடை வளர்ந்ததன் பின்னர் கவிதை தன் செல்வாக்கை இழந்து கொண்டு வருகின்றது.

எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் கவிதை வடிவில் அதைச் சொல்வதும், எழுதுவதும் கவிதைகளுக்கு விளக்கம் அளிக்க அந்தக் கவிதை விளக்கங்களைக் கேட்பதறகும் மக்கள ஒன்று கூடுவதும், என ஒரு காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றில் இணங்காணக் கூடியதாக இருந்தது.

இந்தளவுக்கு இல்லையென்றாலும் கவிதையை ரசிக்கவும், எழுதவும் வல்லவர்கள் தற்காலத்திலும் காணப்படுகின்றார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகவே உள்ளது.

கவிதையிலும் மரபுக் கவிதை, புதுக்கவிதை என்கின்ற இரண்டு வரையறைகள் காணப்படுகின்றன. இந்த வரையறைகளுக்கு அமைவாக நோக்குகின்ற போது, தற்காலத்தில் புதுக் கவிதைகளையே அதிகம் பேர் படிக்கின்றார்கள், எழுதுகின்றார்கள்.

மரபுக் கவிதை என்றால் கடினமானது என்ற போக்கு அல்லது அது பழமையானது என்ற கருத்து தற்போது காணப்படுகின்றது. இத்தகைய கருத்துக்கு வலுச் சேர்ப்பதனால் மரபுக் கவிதைகள் தனது செல்வாக்கை இழந்து வருகின்றதையே காணலாம்.

இத்தகைய கருத்துக்களால் பழைய இலக்கியங்களில் காணப்பட்ட கருத்துக்களையும், முன்னோர்களின் சிந்தனைகளையும் அறிய முடியாத ஒரு நிலையே எதிர்காலத்தில் தோன்றும்.

மரபுக் கவிதைகள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்கின்ற வகையில் பாகுபடுத்தப்படுகின்றன.

இவற்றில் வெண்பா ஏனைய மூன்று பாவகையிலும் கடினமான ஒன்றாக கருதப்படுகின்றது. இத்தகைய கருத்து தொன்றுதொட்டே நிலவி வருகின்றது.

'வெண்பா' வெள்ளைப்பா என அழைக்கப்படுகின்றது. அதற்குரிய சீர், தளைகளுடன் சரியான வகையில் இதனைப்பாடுதல் வேண்டும்.

ஒரு வெள்ளைத் துணியில் காணப்படுகின்ற ஒரு கறை எவ்வாறு உடனடியாக வெளியே தெரியுமோ, அதே போல் வெண்பாவில் காணப்படும் குற்றம் உடனடியாக வெளியில் தெரியும்.

செப்பல் ஓசையையுடைய வெண்பா ஒருவருக்கு அறிவுரை கூறுவது போன்ற ஓசையுடன் பெரும்பாலும் காணப்படும். புகழேந்திப் புலவர் வெண்பாவுக்கு சிறந்த புலவராக தமிழிலக்கிய வரலாற்றில் குறிக்கப்படுகின்றார்.

புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா இன்றும் இலக்கிய ரசிகர்களால் ரசிக்கப்பட்டு வருகின்றது. வெண்பாவை இலகுவில் மனதில் இருத்திக் கொள்ளமுடியும்.



ஆனால், அதைப்பாடுவது என்பது இலகுவான காரியமல்ல.

இவ்வாறான கருத்துக்களை அறிந்து கொண்ட, கவிதையில் ஈடுபாடு கொண்ட ஒருவன் கவிஞன் ஒருவனிடம் சென்றான்.

வெண்பா பாடுவது பற்றி எனக்குக் கற்றுக்கொடுங்கள் என்று கவிஞனிடம் அவன் கேட்டுக் கொண்டான். வந்தவனுக்கு கவிதைகளில் நல்ல ஈடுபாடு காணப்படுகின்ற தன்மையை கவிஞர் உணர்ந்து கொண்டார். வெண்பாவுக்குரிய இலக்கணங்களைக் கூறி வந்தவனை வழிப்படுத்துவதில் அவர் முயற்சி செய்யவில்லை. வெண்பாவுக்குரிய இலக்கணம் இது என்று கூறி புதியவனை அச்சமடையச் செய்ய கவிஞர் விரும்பவில்லை. வெண்பா எழுதுவது இப்படித்தான். இதேபோல் என்று ஒரு வெண்பாவையே இவர் பாடிக்காட்டினார். அந்த வெண்பா இதுதான்.

**"வெண்பா எழுதுவது தொன்றும்**
**கடினமில்லை**
**கண்பார்த்தே யாத்து விடலாம் - நண்பனே**
**சீர்தளை பற்றிக் கவலைப்படாமல்**
**நேராய் இது போல் எழுது"**

வெண்பாவின வரையறைகளுடன் கூடிய இந்தக் கவிதை வெண்பா எழுதுவது எப்படி என்ற புதியவரின் கேள்விக்கும், வெண்பாவுக்கும் உதாரணமாக அமைந்தது. இவ்வாறு தான் மரபுக்கவிதைகளும், மரபுக் கவிதைகளை இயற்றிய கவிஞர்களதும் உணர்வுகளாக அமைந்தன.

எதையும் வரையறைகளுடன் இலகுவானதாகச் சொல்வதில் மரபுக் கவிஞர்களின் பணி எழுதுவதற்கு அரிய தொன்றாக விளங்குவதையே இதன்மூலம் கூறக்கூடியதாகவுள்ளது.

பூ.நகுலன்

# நூல் அகம்

நூலின் பெயர் : சமரும் மருத்துவமும
எழுதியவர் : தூயவன்
வெளியீடு : தமிழ்த்தாய் வெளியீடு
விலை : 100/=

களத்தில், மருத்துவம் என்பது ஒரு தார்ப்பரிய சேவை ஆகும். போர்க்களத்தில் நின்று போராடும் போதும், உடற்காயங்களுக்கு உள்ளாகும் போதும் காயப்பட்ட போராளி சாவை நெருங்கும் விநாடிக்குள் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வந்து சிகிச்சை அளித்து உயிர்ப்பூட்டும் மருத்துவமானது மகத்தானது.

இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் போர்க்களத்தில் நடைபெற்ற சிகிச்சை எப்படிப்பட்டது என்றும், சிகிச்சையினை மேற்கொள்ளும் போது, பட்ட கஷ்டங்கள் கதையாகவும், சம்பவங்களாகவும் நகர்த்திச் சென்றிருக்கின்றது. அறியாத கள அனுபவங்களும் இதனூடாகவே அறிந்து கொள்ளமுடிகின்றது.

கள மருத்துவத்தில் பங்கேற்று அங்கு நடைபெற்ற சம்பவங்களையே நூலாக வெளியிட்டிருக்கும் திறமை தூயவனையே சேரும். இந்த நூலின் ஒரு பக்கத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு சம்பவம் இது -

போர் முழக்கத்தை வெளிப்படுத்தும், வந்து விழுந்து வெடிக்கும் எதிரியின் எறிகணைகளும் சில நூறு மீற்றர் தூரத்தில் போராளிகளால் ஏவப்படும் எறிகணைகள் புறப்படும் சத்தமும், வானில் சுற்றிக்கொண்டிருக்கும் ஆளில்லா வேவு விமானமும், சற்றுத் தொலைவில் கேட்கும் கனரகத் துப்பாக்கிகளின் ஓசையும், போர் நிலைப்பிரகடனத்தைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றன.

50 மீற்றர் தூரமளவில் விழுந்து வெடிக்கும் ஆட்லறி எறிகணையொன்றின் சிதறல்கள், இவர்களின் கொட்டகையைச் சுற்றி அடுக்கப்பட்டிருக்கின்ற பனைமரத் துண்டங்களில் சடசடவெனப் பட்டுப் பதம்பார்க்கின்றன. அவ்வேளை தூரத்தில் இருந்து இவர்களின் பகுதியை நோக்கி "லான்ட் றோலர்" வாகனம் ஒன்று வேகமாக வருகின்றது. வண்டு சுற்றுவதையும் கவனிக்காமல் இவங்கள் வாறாங்கள் எனக் கோபமுடன் கத்தியபடி அவ்வாகனத்தின் திசையைத் திருப்பிவிடும் முகமாக அவ்வாகனத்தை நோக்கி ஓடுகிறான் ஒரு போராளி.

இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றின்போது 01.02.1998 இல் எமது மருத்துவத் தளம் ஒன்று வான் தாக்குதலுக்கு உள்ளானதால் இரண்டு இராணுவ மருத்துவர் உட்பட 43 பேரை நாம் இழந்தோம்.

இந்த நிகழ்வு ஞாபகத்துக்கு வர அனைவர் மனதிலும் பயம் எட்டிப் பார்க்கவே செய்கின்றது. எனினும் அரைகுறையாகச் சத்திரசிகிச்சையை நிறுத்திவிட்டுப் போகமுடி யாததாலும், அவர்கள் அதனை வெளிக்காட்டாமல் தமது பணியைத் தொடர்ந்தனர்.




இந்த உண்மை யைப் படிக்கின்ற போது நாம் அந்த இடத்தில் நின்ற உணர்வையும், களத்தில் மருத்துவம் எவ்வளவு முக்கியம் என்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

களத்தில் வீரச்சாவு அடையும் ஒரு உயிர் பெறுமதியானது. எந்தக் கஷ்ரங்கள், துன்பங்கள் வரினும் காயப்பட்ட போராளியை எப்படியாவது காப்பாற்றிவிடவேண்டும் என்ற துடிப்பு மருத்துவப் போராளிகளிடம் இருக்கின்றது.

இதேபோல, இன்னொரு பக்கத்தில் ஒரு சம்பவம் - திடீரென சில முக்கிய மருந்துகள் பாரியளவில் தேவைப்பட்டன. நீலனுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டது. இதோ வருகின்றோம் எனத் தேவையானவற்றுடன் கடற்புலிகள் புறப்பட்டு வந்தனர். மேகக்கூட்டங்களும், சிறு தீவு முனைகளும் எம் ராடர்களை ஏமாற்றின. அலையினைக் கிழித்து இருளினூடு விரைந்து வந்த படகுகள் எதிரியின் முற்றுகைக்குள் சிக்கின. எம்மரபிற்கேற்ப சமராடியவர்கள் இறுதியில் படகுகளை வெடிக்க வைத்தனர். லெப்.கேணல் நீலன், கடற் சமர்த் தளபதிகள் உட்பட 10 இற்கும் மேற்பட்டவர்களின் வித்துடல்கள் மருத்துவப் பொருட்களுடன் கடலில் மிதந்து அலையில் அடிபட்டு அக்கரை சேர்ந்ததாகச் செய்தி வந்தது.

இதைப் படிக்கின்றபோது மருத்துவம், களம் இரண்டிற்கும் ஒற்றுமை இருக்கின்றது. இந்த நூலில் பக்கம் பக்கமாக களங்களையும், அதில் காயப்பட்டவர்களுக்கு மருத்துவம் வழங்குவதைப் பார்க்கின்றபோது எல்லோரும் படிக்கவேண்டிய இந்நூல். இது வேறு யாராலும் எழுதப்படமுடியாதவை. போராளிகளைத் தவிர, தூயவனின் இந்த எழுத்து வடிவம் ஒரு வரலாறு.

- செல்.

# கோபக்கடல்
## இரண்டு காட்சிகள்



**காட்சி 1**

காலையில் எழுந்து
கடற்புறம் நடக்கிறேன்

கரைநெடுகக் கவிழ்ந்து கிடக்கின்ற
உடைந்த படகுகளினூடே
விரைந்துகொண்டிருக்கின்றன
போர்க்கப்பல்கள்

நீலத்தை இழந்து
தவித்துக்கொண்டிருக்கிறது கடல்.

முரட்டுக் காற்றின் வெப்பத்தால்
முகத்திலறைகிறது கடலின் கோபம்

கரையில் நின்றபடி
கடலின் துயருக்கும் கோபத்துக்கும்
காரணத்தைக்
கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

கடல் தன் அலைகளை
நீட்டிக்கொண்டேயிருக்கிறது
கரையின் பக்கமாய்.

**காட்சி 2**
**(பின் நினைவு)**

பின்னிரவில்
குருதி பெருக்கிக்
கொதித்துக்கொண்டிருக்கிறது
கடல்

அது பிறகு
ராட்சதமாய் உருத்தெழுந்து
பிளிறியபடியே
திசைகளெங்கும் நடக்கிறது

அதன் ஒவ்வொரு கால்களிலும்
அகப்பட்ட ஊர்மனைகள்
நசுங்கிப் புதைகையில்
சீறிக் கிளரும் ஓலத் தெறிப்பில்
சிவந்தலைகிறது வானம்

அலையொன்று
மூர்க்கித்து வந்தென்னை
திருகித் தூக்கி எறிகிறது

வெளியின் ஆழத்துள்ளிருந்து
விழுந்துகொண்டிருக்கின்றேன்
தலை சுற்றி.

முன்னர்
கடல் படுத்திருந்த இடத்தில்
பெருகிக் கிடந்து
நொதித்துக்கொண்டிருந்த
மானிட வர்க்கத்தின் வஞ்சகச் சகதியிடை
விழுந்து பதைத்துப் புதைகிறது
என் உயிர்.

- அமரதாஸ்.

# தரை நிலவாய் அந்தப் பெண்

காதலர்களுக்கு மரணம் உண்டு. காதலுக்கு மரணம் இல்லை - காலம் காலமாக உலகெங்கும். வழங்கிவரும் காதல் கதைகள் இதைத்தான் நிரூபிக்கின்றன. அமுதவல்லி - உதாரன் கதை இதற்கு விதிவிலக்கானது. காதலும் வெற்றி பெறுகிறது. காதலர்களும் வெற்றி பெறுகிறார்கள். 'பில்கணீயம்' என்ற வடமொழி நூலைத் தழுவித் தமிழில் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய குறுங்காவியம். புரட்சிக்கவியின் இந்தக்காவியத்தில்தான் அமுதவல்லியும் உதாரனும் ஓவியக் காதலர்களாய் உலவுகிறார்கள்.



அமுதவல்லி - அரசிளங்குமாரி! உன்னதமான தமிழ்க் கவிஞன் உதாரன்! இளவரசிக்குக் கவிதை எழுதக் கற்றுத் தருமாறு உதாரன் அழைக்கப்படுகிறான். அவன் அழகன் அதனால் - அரச மண்டபத்தில் ஆலோசனை! அவசரமான அமைச்சரவைக் கூட்டம்! காதலுக்குப் பயந்தவர்கள் கலந்தாலோசிக்கிறார்கள்.

ஆசானுக்கும் மாணவிக்கும் நடுவில் ஓர் அகன்ற திரை! பார்வையற்றவன் உதாரன் என்றும், அவனைப் பார்ப்பதே அபசகுணம் என்றும் அமுதவல்லி அறிவுறுத்தப்படுகிறாள். அமுதவல்லிக்குப் பெருநோய் என்று உதாரனிடம் செப்பப்படுகிறது. மன்னன் தலைமையில் நடந்த மந்திரிசபைக் கூட்டம் ஏக மனதாய் எடுத்த முடிவைக் காதலர்கள் தாக மனதால் தகர்க்கிறார்கள்.

ஒருநாள் - நிலா உலா வரும் நேரம் - கவிதை வகுப்பெடுக்கக் காத்திருக்கிறான் கவிஞன். தையல் வருவதற்குத் தாமதமாகிறது. தண்ணிலவைப் பார்த்துத் தமிழ்க் கவிஞன் பாடிக்கொண்டிருக்கும் போதே, தரை நிலவாய் அந்தப் பெண்ணிலவு வந்து விடுகிறாள்.

'கண்ணா! உனக்கா கண்ணில்லை என்றார்கள்'?

'பெண்ணழகே! எனக்கா பெருநோய் என்றார்கள்'?

கேள்விகள் கிளர்ந்தன. வயுதானவர்கள் எதை எண்ணி அஞ்சினார்களோ அது நடந்துவிட்டது.

இரு இளைய இதயங்களில் காலம் போட்டது காதல் பாலம்! பாலத்தின் அடியில் பதுங்கியிருந்து காமன் பாடினான் பூபாளம்! அரசவை கூடியது. இருவரையும் கொலைக் களத்துக்கு அனுப்ப ஆணையிட்டான் மன்னன்.

காதலர்களின் கருத்துக்களை இறுக்கி, நெருக்கிக் கொல்லக் காத்திருந்தது தூக்குக் கயிறு. கொலைக்களத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் தன் கடைசி உரையை நிகழ்த்தினான் கவிஞன்.

"தமிழறிந்ததால் வேந்தன் என அழைத்தான். தமிழ்க் கவிஞன் என்பதால் அவள் என்னைக் காதலித்தாள். அமுதென்று சொல்லும் இந்தத் தமிழ் - என் ஆவி அழிவதற்குக் காரணமாய் இருந்ததென்று- சமுதாயம் நினைத்திடுமோ? என் தாய் மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ? தமிழுக்குப் பழிவந்தால் சகிப்பார்களோ? கூட்டம் குமுறியது, கொந்தளித்தது, பொங்கியது, பூகம்பமானது புரட்சி வெடித்தது.

அரியணையிலிருந்து அரசன் இறங்கினான். மமதையும் அவன் மகுடத்துடன் சேர்ந்து இறங்கியது. மக்கள் ஆட்சி மலர்ந்தது. காதலர் இணைந்தனர். கவி மணம் புரிந்தனர்.

மூலக் கதையில் ஒரு சிறிய மாற்றம் செய்கிறார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்! அந்த மாற்றம் தமிழுக்கு ஏற்றம் தருகிறது. அதனால் இந்தக்காதல் ஓவியம் என் இதயத்தை வரைகிறது.

- மு.மேத்தா

# இலக்கிய முத்து

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என ஆனை கட்டிப் போரடித்த அழகான தென்மதுரை மாநகரத்தில் ஓர் நாள்.

வானமகள் சிணுங்கும் அதிகாலைப் பொழுது. கண்சிமிட்டும் தாரகைகள் எங்கோ மறைந்து விட்டன. பூமாதேவியை தன் கூதற் கைகளால் வானமகள் தாலாட்டுகின்றாள். மனித சஞ்சாரம் அற்று வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.



வீதியின் ஓரத்திலே உள்ள மரத்தின் கீழே ஓர் உருவம் குந்திக் கொண்டிருக்கின்றது. அதன் இடுப்பிலே ஒரு கசங்கிய கந்தற் துணி மட்டும் காணப்படுகிறது. கூதற் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது கரங்களை தோள்களின் மீது போட்டு மூசும் குளிரிலிருந்து தனது மார்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. அதேபோல நடுங்கும் குளிரில் இருந்து தனது வயிற்றுப் பாகத்தைப் பாதுகாத்துக் கொள்ள முழந்தாள்களினால் அணை போட்டுக் கொண்டிருக்கும் அந்த உருவம் வேறு யாருமல்ல. அவர் ஒரு புலவர். அவர்தான் சத்திமுற்றப் புலவர்.

நனி, குளிரில் வருந்தும் அத் தமிழ்ப் பாவலன் காதிற்கு ஏதோ சத்தம் கேட்கின்றது. கூர்ந்து கேட்கின்றார் புலவர். அவரது கண்கள் ஆகாயத்தை நோக்குகின்றன. அங்கே இரண்டு நாரைகள் வானோடு உறவாடிக் கவிபாடிப் பறந்து வருகின்றன.

## சேதி சொல்வாய் நாராய்

அவற்றைக் கண்டதும் அக் கவி உள்ளத்தில் சில எண்ண அலைகள் தோன்றுகின்றன.

இவ்விடத்தில் நான் ஒரு ஏதிலி. யாருமற்ற அநாதை யார் எனக்கு உதவி செய்வார். என் நிலைமையை யார் என்மனைவிக்கு உரைப்பார் என எண்ணி அந்நாரைகளைப் பார்த்து, நாரை! சிவந்த கால்களையும் பவளம் போன்ற சொண்டினையும் உடைய நாரையே! நீயும் உன் மனைவியும் வட திசைக்குச் செல்வீர்களானால் சத்திமுற்ற வாவிக்கு அருகில் இருக்கும் என்மனையைப் பாருங்கள்.

அவள் குடியிருக்கும் ஓட்டைக் கூரை வீட்டிலே நனையும் சுவர்களிடையே என்னை எதிர்பார்த்திருப்பாள். பல்லி சொல்லும் போதெல்லாம் இதோ வருவார் என் கணவன் என ஏங்கித் தவிப்பாள். அவளுக்கு எனது நிலைமை புரியாது. அவளைப் பார்த்து எமது மன்னன் மாறன் வழுதியினுடைய மாநகரத்திலே மழை பொழியும் ஓர் பொழுதிலே ஆடை இன்றி வாடைக் காற்றால் வருந்தித் தனது கைகளால் நெஞ்சினையும் கால்களால் உடலினையும் மறைத்த வண்ணமாக பெட்டியில் அடைப்பட்டு பெருமூச்சு விடும் பாம்பு போன்றிருக்கும் உன் ஏழைக் கணவனைக் கண்டேன் என்று கூறுங்கள் எனத் தன் சோகத்தை வார்த்தைகளால் வடித்து விடுகின்றார்.

நாராய்! நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனைவியுந் தென்திசை குமரியாடி
வட திசை கேகுவாராயின் எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீ இப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே.
(சத்தி முற்றப் புலவர்)

- லெஸ்லி.

# நிழல்

என்னோ டிணைபிரியா
திருக்கின்ற தோழன் நீ
என்னோடு சாவரைக்கும்
இணைந்து வரும் அன்பன் நீ
நானுறங்கும் போது
நீ என்னில் படுத்திருப்பாய்
நான் நடக்கும் போது
என்னருகில் நீ நடப்பாய்
காலையிலும் மாலையிலும்
கைபிடித்து நீ வருவாய்
நேரத்திற்கேற்ப நீ என்னை
அளந்திருப்பாய்.
சில நேரம் உருப்பெருக்கி என்
பெருமை நீயுரைப்பாய்
சில நேரம் சிறிதாகி என்சிறுமை
சொல்லிடுவாய்.
எந்தன் மனச்சாட்சி
எது என்று நானறியேன்..
உன்னை நான் காண்கையிலே
நீ என் பிழை சுட்டி
என் நிலையைக் காட்டையிலே
எனது மனச்சாட்சி நீயோ
என நானும் நினைக்கமுன்
நிறகின்றாய்
யாருக்குந் தெரியாமல்
எந்தன் அசிங்கத்தை
நான் இரசிக்கும் போது
என் சுயமோ நாறுகையில்
நீ சாட்சியாகி நெஞ்சைக்
கலக்கிடுவாய்.
எந்தன் நிழலே
எனைப்பிரியா என்னுறவே
நீ எனக்கு எப்போ போதிமரம்
ஆகிடுவாய்?

- த.ஜெயசீலன்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
வன்கண் குடிகாத்தல் கற்றஅறிதல் ஆன்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.
திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதான முயற்சிகளை கேள்விக்குறியாக்கும் ஜனாதிபதியினதும் அரசினதும் முயற்சிகள்!

யாழ்ப்பாணக் குடாக் கடற்பகுதியிலும் மற்றும் வடமராட்சிக் கடற் பிரதேசத்திலும் இலங்கைக் கடற்படையினர் பயிற்சி மற்றும் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திவருகின்றமையானது மக்கள் மத்தியில் சமாதானத்தின் எதிர்காலம் குறித்து சந்தேகங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

ஏற்கனவே, கடந்த ஐ.தே.க. முன்னணி ஆட்சிக் காலத்தின் போது, கடற்படையினரின் பல்வேறு நியாயமற்ற போருணர்வு முனைப்புக் கொண்டதான நடவடிக்கைகளால், சமாதானச் சூழல் உடைந்து மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கும் சூழ்நிலை தோன்றிய போதிலும், விடுதலைப் புலிகளின் சமாதானம் மீதான பற்றுறுதியும், போர் நிறுத்த உடன்படிக்கையை மதிக்கும் நாகரிகமும், அத்தகையதோர் போர் அவலம் ஏற்படாமலிருக்க உதவியது.

ஆனாலும், கடற்படையினரின் செயற்பாடுகளும், கடற்படைத் தளபதி சந்தகிரியின் நடவடிக்கைகளும், அவரது அறிக்கைகளும், அவருக்கு ஆதரவானதும் அவரை உற்சாகப்படுத்துவதுமான ஜனாதிபதியின் நகர்வுகளும், இன்னமும் சமாதான முயற்சிகளைக் குழப்பும் தன்மை கொண்டதாகவும், அதனை அச்சுறுத்தும் போர் முனைப்புக் கொண்டதாகவுமே தொடர்ந்தும் இருந்து வருகிறது.

வெளிப்படையாக, ஜனாதிபதி சமாதானத்தின்மீது அக்கறை கொண்டவராகவும், சமாதான முயற்சிகளைத் தொடர்வதில் ஆர்வம் கொண்டவராகவும், தன்னைக் காட்டிகொள்ள முயன்றுவருகின்றபோதிலும், அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை தன்வசம் ஆக்கிக்கொண்ட பின்னர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க - ஆரம்பச் செயற்பாடுகளில் தீவிரம் காட்டிக்கொள்வதாக உணர்த்த முயன்றபோதிலும் உண்மையில் மனப்பூர்வமாகவும், விசுவாசமாகவும் அவர்கள் செயலூக்கம் கொள்ளவில்லையென்பதே உண்மை.

மாறாக அரசும், ஜனாதிபதியும் மீண்டும் ஒரு யுத்தத்தை மேற்கொள்ளும் மூலோபாயத்தை வகுத்துக் கொண்டு, அதற்கேற்ப தமது பாதுகாப்புத் துறையை மேம்படுத்தவும், இராணுவ வளத்தைப் பெருக்கவுமே நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர் என்பது தெளிவு.

அரசோ, ஜனாதிபதியோ இதனை மறுத்தாலும், இன்றைய 'இலங்கை அரசியல் சூழலின் யதார்த்த நிலை இதுவேயாகும்.

எந்தவொரு நிகழ்வையும், எந்தவொரு சிறிய இடைவெளியையும், எந்தவொரு வாய்ப்பையும்கூட - அரசு ஒரு போர்ச் சூழலை உருவாக்கி அதன் மூலம் அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தவே முனைகிறது எனலாம்.

- இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்.
- அமெரிக்காவுடனான பாதுகாப்பு உடன்பாடு.
- விமானப் படைக்கு புதிய போர் விமானங்களைக் கொள்வளனவு செய்தல்.
- இராணுவத்திற்குப் புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல்.
- கடற்படைக்கு அமெரிக்காவிடமிருந்து போர்க் கப்பலைக் கொள்வனவு செய்தல்.
- கருணா விவகாரத்தைக் கையாளுகின்ற விதம்.
- இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாகக் காட்டும் அக்கறையின்மை.

இவையாவும் சமாதானத்தை எந்த வகையிலும் அரசு உறுதியான முறையில், நம்பிக்கையூட்டும் வகையில் முன்னெடுக்கப்போவதில்லை என்பதையும், ஜனாதிபதிக்கு- சமாதான முயற்சிகள், தமிழ் மக்களையும், சர்வதேச அமைதியை விரும்பும் சமூகத்தையும், ஏன்... சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர்களையும் ஏமாற்றும் ஒரு வகையான விளையாட்டாகவே உள்ளது என்பதையும் - இறுக்கமாகவும், தெளிவாகவும், ஆதாரபூர்வமாகவும் உணர்த்துவதாகவுமே உள்ளன.

இந்தச் சூழல் விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்கும் ஒன்றாகவே உள்ளது.

தொடர்ந்தும் இந்த நில்ல நீடிப்பதன் ஆபத்தினை, அமைதிப் பேச்சுக்களை வலியுறுத்தும் உலக சமூகம் தெளிவாகப் புரிந்துகொண்டு, அரசின் மீதான அழுத்தங்களை அதிகரிக்காவிடின் மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்க நினைக்கும் ஐ.ம.சு.முன்னணி அரசுக்கு அது உற்சாகமூட்டுவதாகவே அமையும்.

சமாதானத்தை வலியுறுத்திக்கொண்டே போர்க் கப்பலையும் இலங்கைக் கடற்படைக்கு வழங்கியுதவும் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க சக்திகளின் செயற்பாடுகள், இலங்கையையும் தமிழ் மக்களையும் ஒரு சேர நாசமாக்கும் முயற்சிகளை இலக்காகக் கொண்டதென்றே கருதவேண்டியதாகவுள்ளது.

சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் என்பது நேர்மையும், உறுதியும், தேசப்பற்றும் கொண்ட செயல்வீரர்களால் அர்ப்பணிப்புடனும் விட்டுக் கொடுப்புடனும் மேற்கொள்ளவேண்டிய, பாதிப்புற்றவர்களுக்கு நியாயம் வழங்கும் நடவடிக்கையாக இல்லாவிடில் அதனால் எந்த நன்மையும் ஏற்படாதென்பது வரலாறு கற்பித்துள்ள ஒரு பாடமாகும்.

## நாடும் நடப்பும்




# தலைவரின் காலத்தில் சூழ்ச்சிசெய்தால் விளைவுகளை அனுபவிக்க நேரிடும்!

## தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் உமைநேசன் தெரிவிப்பு



சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் எமது மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. இதனை மக்கள் நன்கு அறிவார்கள் எனத் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மானிப்பாய் பிரதேச சபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - சமாதான காலத்தில் எமக்கு கிடைத்தது எதுவும் இல்லை. நாம் இக்கட்டான சூழல் ஒன்றுக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த சமாதான சூழலில் எமது தலைவர் மிகவும் நிதானமாகவும், பொறுமையாகவும் செயல்படுகின்றார்.

இந்தச் சமாதான சூழலில் 30 இற்கும் மேற்பட்ட எமது புலி வீரர்களை இழந்துள்ளோம். நிச்சயமாக ஒன்றைச்சொல்ல முடியும். எமது தலைவரை எந்தச் சக்தியினாலும் அடிபணிய வைக்கமுடியாது.

எமது தலைவர் நினைத்ததைச் சாதிப்பவர். இப்போதும் எமது மக்களுக்காக எதையும்செய்யும் வல்லமை கொண்டவர். இந்த மண்ணின் விடுதலைக்காகக் கொடுக்கப்படும் இழப்பு மிகப்பெரியது. இவற்றைவிட தமது அங்கங்களை இழந்தவர்கள் பலர் உள்ளனர். எமது தலைவர் காலத்தில் எமக்கு சூழ்ச்சிசெய்ய நினைத்தால் அதன் விளைவுகளை அவர்களே அனுபவித்துக்கொள்வர்.

நாம் இராணுவபலத்திலும், அரசியற்பலத்திலும் சமபலத்துடன் காணப்படுகின்றோம்.

இதன்காரணமாக சர்வதேசமும் எம்மை உற்றுநோக்கிப் பார்க்கின்றது. எமது தலைவர் அரசியற்போக்கில் மற்றவர்களை விஞ்சும் வகையில் நிதானமாகச் செயற்படுகின்றார். போர் எழுச்சிக்குழு என்பது எமது தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக்குழு தற்போது சமூக செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும்.

தேசிய எழுச்சிப் பேரவை உருவாக்கப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாகத் தனது பணிகளை மேற்கொள்ளுகின்றது. தேசிய எழுச்சிப் பேரவை மாவட்டந்தோறும் பல பணிகளைச் சிறப்பாக மேற்கொண்டுவருவதை அவதானிக்க முடிகின்றது. எமது தேசிய எழுச்சிப் பேரவையின் பணிகளை மேலும் மேலும் விரிவாக்கவேண்டும். நாம் கடந்த் சில வருடமாக சமாதானத்தை நோக்கிய பணியில் செயற்பட்டு வருகின்றோம்.

இந்தக்காலம், சமாதானத்திற்கான காலமா? சமாதான காலமா? என்பதை அறிய எமது மக்கள் அமைப்புக்கள் போராடவேணடும். எமது மண விடுதலைக்காக ஏதோ ஒருவகையில் ஒவ்வொரு மக்களும் பணியாற்றவேண்டும்.

நாம் ஆயுதம் ஏந்தினால் விடுதலையை வென்றெடுப்பது என்பது உறுதி. எமது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தேசவிடுதலைக்காக ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

அந்த வகையில் மக்களின் உழைப்பு என்பது போராட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றது. எமது போராட்டக் காலத்தில் வயது வேறுபாடுகள் இன்றி மக்கள் எமக்கு உதவினார்கள். பொஙகுதமிழ் நிகழ்வு, நடைபெற்று முடிந்ததேர்தல் போன்ற சம்பவங்களிலும் மக்கள் தமது ஒற்றுமையைக் காட்டினர். எவ்வாறாயினும் கடந்த தேர்தலின்போது, ஓர் தீயசக்தி எம் மண்ணில் புகுந்துள்ளது. இதனை நாம் மீளாய்வு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார். (தீ)

# பௌத்தபிக்கு தாக்கப்பட்டமைக்கு கத்தோலிக்க ஆயர்கள் கண்டனம்

கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தினுள் இடம்பெற்ற சம்பவத்தில் புத்தபிக்குகள் தாக்கப்பட்டமையை இலங்கை கததோலிக்க ஆயர்கள் வன்மையாக கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கையிலுள்ள கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது -

நாடாளுமன்றில் எப்பொழுதும் கௌரவம், நல்லொழுக்கம் என்பன காக்கப்படவேண்டும், நாட்டின் நலனைக்கருத்திற் கொண்டு நாடாளுமன்றில் சட்டங்களை இயற்றுபவர்கள் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். குறிப்பாக எமது இளைஞர்களுக்கும் - சிறுவர்களுக்காகவேனும் நல்லமுறையில நடக்கவேண்டும்.

ஆகவே நாம் சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கோருவது, நாடாளுமன்றில் எப்பொழுதும் உயர்ந்த பட்ச கருத்துக்களைப் பின்பற்றுங்கள் என்பதாகும்.

அத்துடன் கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றில் பிக்குகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகள் இன்று சபாநாயகரை சந்திக்கும்

எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு - சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சுமுகமான நிலையில் கூட்டத் தொடர் நடத்துவது தொடர்பாக ஆராயவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தது.

ஐக்கியதேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

## கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம்; மட்டக்களப்பிலும் நிகழ்வுகள்!

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் எதிர்காலத்தில் புதைக்கக்கூடாதென்று வலியுறுத்தியும், கண்ணிவெடிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல நிகழ்வுகள் நடைபெற்றன. யுனிசெவ் நிறுவனம், சர்வோதய நிறுவன ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது. இது குறித்து நடாத்தப்பட்ட பேரணியில் வவுணதீவு, உன்னிச்சை, ஆயித்தியமலை, புல்லுமலை, கோப்பாவெளி, வந்தாறுமூலை, களுவன்கேணி, ஏறாவூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினர்.

யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதிகளும், பேரணியில் இணைந்து செயற்பட்டனர். வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக ஆரம்பாமாகி, பிரதான பேரணியுடன் ஏனைய பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப்பேரணியல் இணைநது கொண்டனர். சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தைக் கடந்த பேரணி, ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய முன்றலை அடைந்தது. இதன்பின் அங்கு பலவித நிகழ்வுகள் இடம்பெற்றன.

## அரசியல் கண்ணோட்டம்

கே.ரீ.கணேசலிங்கம்

# பாகிஸ்தான் பிரதமர் பதவிவிலகலும் இந்தியத் தரப்பின் பலவீனங்களும்

பாகிஸ்தானின் பிரதமர் ஜமருல்லாக்ஹான் ஜமாலி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ள விடயம உலகளாவிய அரசியலில் பேசப்படும் அம்சமாக மாறியுள்ளது.

பாகிஸ்தானின் அரசியலில் இது ஒன்றும் நிகழாத விடயமல்ல. என்றாலும் இன்றைய சூழல் அந்த ளவு பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து பாகிஸ்தான் பல மாறுதல்களையும், நெருக்கடிகளையும் சாதனைகளையும் கண்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, ஜனநாயக நாடாளுமன்ற இராணுவ ஆட்சியாளரின் அரசியல், என இரு ஆட்சி மாதிரிகளையும் கொண்டுள்ள நாடாகத் திகழுகின்றது. எனவே ஜமாலியின் இராஜினாமா உணர்த்தும் அரசியல் எதுவென்பதை பரிசீலிப்போம்.

ஜமாலி இராஜினாமாச் செய்தார் என்பதை விட இராஜினாமாவைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றே ஊடகங்கள் கருத்துக் கூறுகின்றன. இவர் இராஜினாமாச் செய்ததுடன் ஜனாதிபதி முஷாரப் ஏற்றுக் கொண்டார். அப்படியாயின் இராணுவஜனாதிபதி முஷாரப்புக்கு, ஜமாலி பிரதமராக இருப்பது அவரது அரசியல் நலனுக்கு ஆபத்துமிக்கதாக அமைந்திருக்கின்றது. அதுமட்டுமல்லாது இருவருக்குமான முறுகல் பல மாதங்களாக நிகழ்ந்ததாகவும் முஷாரப் ஜமாலியை எதிர்ப்பவராகவே விளங்கினார் என்பதும், இதனூடாக தெளிவாகின்றது. அப்படியாயின் முஷராப்பின் நோக்கில் ஜமாலியின் இருப்பு எப்படியான ஆபத்து மிக்கது, அவ்வாறே முஷாரப்பின் அரசியல் நலன் எதுவென்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஜமாலி, அரசியலிலும், பொது வாழ்விலும் அதிகம் சலசலப்பு இல்லாதவர். மென்மையான போக்கை உள்நாட்டிலும், பிராந்திய மட்டத்திலும் கடைப்பிடிப்பவர். இயல்பாகவே மென்மைவாதியாகத் திகழும் ஜமாலி தீர்க்கமான முடிவுகளை எடுப்பதுடன் யதார்த்தத்தை அனுசரித்துச் செயல்படக்கூடியவர்.

அத்தோடு முஷாரப் போன்று சராசரி அரசியல் வாதியாக விளங்காதவர். குறிப்பாக ஆப்கானிஸ்தான் போராட்டத்தில் வலுவடைந்திருந்த தீவிரவாத அமைப்புக்களையும், அவர்களுடன் இணைந்திருந்த இஸ்லாமிய தீவிரவாதத்தையும் ஆதரிப்பவர். முஷாரப் போன்று முன்னும் பின்னும் மாறுபட்ட கொள்கையை பின்பற்றாது இஸ்லாத்துக்காக போராடும் குணமுடையவர் ஜமாலி. இதுவே முஷாரப்புக்கு ஆபத்தானதும், அவரது அரசியல் நலனுக்கு முரண்பாடானதுமாகும்.



பதவிலகலை அறிவிக்கிறார் பிரதமர்

ஜமாலி இந்தியாவுடனான உறவில் சுமுகத்தன்மையையும் அமைதிப் போக்கையும் யதார்த்தமாக எதிர்பார்ப்பவர். இந்தியாவுடன் இணைந்து செயல்பட விருப்புக்கொண்டவர். அதே நேரம் இந்தியாவின் ஏமாற்றுகளை நிராகரிப்பதோடு பாகிஸ்தானின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டவர். முஷாரப் போன்று தனது அரசியல் நலனில் அக்கறை கொண்டிராது பாகிஸ்தானின் நலனில் ஓரளவேனும் கரிசனையுடையவர் ஜமாலி. ஆனால் முஷாரப் முற்றிலும் வேறுபட்ட கொள்கையை பின்பற்றுபவர்.

அமெரிக்காவின் பிராந்திய நலனுக்காக பாகிஸ்தனையே காட்டிக் கொடுக்கத் துணிந்தவர் முஷாரப். எப்போதும் தனது நலனில் அக்கறை கொண்டவர். இதனால் ஏற்பட்ட முரண்பாடே ஜமாலியின் இராஜினாமா. பாகிஸ்தானின் அரசியல் சட்டத்தின் படி ஜனாதிபதியே அதிகாரம் கொண்டவர். ஜனாதிபதி பிரதமரைப் பதவிநீக்கம் செய்யக் கூடியவர். ஆனால் நெருக்கடியான காலகட்டங்களில் ஜமாலி அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து முஷாரப்புக்கு ஆதரவு வழங்கியவர். ஜமாலியின் வெளியேற்றம் குறுகிய காலத்திற்குப் பாகிஸ்தானுக்கு யதார்த்தமான தலைவர் இல்லை என்பதை தெளிவுபடுத்திவிட்டது.

முஷாரப் இந்தியாவுடன் ஒரு அரசியல் சதுரங்கம் ஆடத்தொடங்கிவிட்டார். அதில் ஆபத்தான அல்லது முஷராப்புக்கு இசைந்து கொடுக்காத தடைக்கல்லாக இருந்த பிரதமர் ஜமாலியை அகற்றிவிட்டார்.

ஆப்கானிஸ்தான் ஆதரவாளர் அகற்றப்பட்டுவிட்டார். அடுத்து மென்மையான போக்காளன் (இந்தியாவுடன்) நீக்கப்பட்டுவிட்டார். ஏனெனில் தற்போது இந்தியாவின் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் கூட்டணி பற்றி முஷாரப் நன்கு புரிந்து வைத்துள்ளார். இக்கூட்டணியின் ஆட்சி முஷாரப்புக்குச் சாதகமான காலமாகவே மாறியுள்ளது. என்பது முஷாரப்புக்கு தெரிந்த விடயமாகும். காங்கிரஸ் அரசாங்கத்தின் போக்கை விளங்கிக்கொண்ட முஷாரப் அதற்கேற்ப அரசியல் நகர்வுகளை ஆரம்பித்துவிட்டார்.

காங்கிரஸ் அரசு பாகிஸ்தான் பற்றிய கொள்கையில் பாரதீய ஜனதாவுடன் ஒப்பிடும் போது பலவீனமான அணுகுமுறையையே பின்பற்றி வருகின்றது. காங்கிரஸ் கூட்டணியின் அரசியல் வங்குரோத்து வாஜ்பாய் அரசாங்கத்திடம் இருக்கவில்லை என்பதோடு பாகிஸ்தானுக்கு அதிக விட்டுக்கொடுப்புகளை வழங்கத் தயாராகின்றது. ராஜதந்திரம் என்ற கலையில் காங்கிரஸ்காரர்கள் பின்னோக்கியே செயற்படுகின்றனர். அவர்கள் எப்போதும் எதற்கெடுத்தாலும் 1960கள் காலத்தையே கருத்தில் கொள்கின்றார்கள். இது இந்தியாவுக்கு ஆபத்துமிக்கது. இந்தியாவின் ஐக்கியத்தைத் தகர்ப்பதுடன் பாகிஸ்தானினதும் அதன் வெளிச்சக்திகளதும் வெற்றிக்கு வாய்ப்பைக் கொடுத்துவிடும். இதனை விரிவாக நோக்குவோம்.

புதிய அரசு இந்தியாவின் ஆட்சிக்கு வந்ததுடன் பாகிஸ்தானுடன் சுமுகமான உறவைப் பேணப்போவதாக கூறியது. அதன்படி ஆபத்துமிக்க அணுவாயுதங்களின் பிரயோகம், பயன்பாடு பற்றிய மகாநாடு ஒன்று ஆரம்பத்தில் நிகழ்ந்தது. அதில கணிசமான விடயங்களின் உடன்பாடு எட்டப்பட்டு பிரச்சினையின் அடிப்படைகள் தீர்க்கப்பட்டன. இதில் ஏற்பட்ட உரையாடலில் இந்தியாவைவிட பாகிஸ்தான் அதிக இலாபத்தை அடைந்தது. குறிப்பாக அப்பேச்சுக்களுக்குப் பின்னர் அமெரிக்கா அணுவாயுதம் தொடர்பான அறிவிப்பொன்றை இரண்டு நாடுகளுக்கும் பொதுவானதாக முன்வைத்தது. அதில் இரு நாடுகளும் அணு வாயுத விஸ்தரிப்பை நிறுத்த வேண் டும் என்றும், ஏனைய நாடுகளைப் போன்று அணுவாயுதம் தொடர்பான பரிசோதனைக்கு உடன்படவேண்டுமெனவும் கோரியது. இதற்கு இந்தியா எந்தப் பதிலையும் வழங்காத போது பாகிஸ்தான் உடனடியாக அணுவாயுதத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளின் எத்தகைய நடைமுறைகள் இருக்கின்றதோ அவ்வாறே பாகிஸ்தானிலும் பின்பற்ற வேண்டும் எனவும் அத்தகைய பரிசோதனை அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதென்றும் குறிப்பிட்டது.

> "ஜமாலி இந்தியாவுடனான உறவில் சுமுகத் தன்மையையும் அமைதிப் போக்கையும் யதார்த் தமாக எதிர்பார்ப்பவர். இந்தியாவுடன் இணைந்து செயற்பட விருப்புக்கொண்டவர். அதே நேரம் இந்தியாவின் ஏமாற்றுக்களை நிரா கரிப்பதோடு பாகிஸ்தானின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டவர். முஷாரப் போன்று தனது அரசியல் நலனில் அக்கறை கொண்டிராது பாகிஸ்தானின் நலனில் ஓரளவேனும் கரிசனை யுடையவர் ஜமாலி"

இது பாகிஸ்தானின் அரசியலில் ஏற்பட்ட சாதனையாகும். இத்தகைய உரையாடல் மேலும் ஒரு சந்திப்புக்கான வாய்ப்பை பாகிஸ்தானுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இரு நாட்டின் வெளிவிவகாரச் செயலாளர் மட்டத்திலான மாநாடு தற்போது புதுடெல்கியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இரு நாடுகளுக்குமிடையிலான வெளிவிவகாரச் செயலாளர் மட்டத்தில் நடக்கும் மாநாடாகும். இதில் பயங்கரவாதப் பிரச்சினை என்பது பேசப்பட்டாலும் ஜம்மு -காஷ்மீர் விவகாரம் முதன்மைப்படுத்தப்படுவ துடன் இரு நாடுகளுக்கும் இடையில் நிலையான அமைதியை ஏற்படுத் துவதெனவும் கூறப்படுகின்றது. இதனை பாகிஸ்தானியத் தலைவர்கள் அதிகம் வலியுறுத்துவதுடன் பாகிஸ்தானின் கை ஓங்கியிருப்பது என்பது தெரிகிறது.

ஆனால் எதனை இருதரப்பும் பேசினாலும் ஜம்மு - காஷ்மீர் விடயம் தனித்து இடம்பெறுவது இந்தியாவுக்கு ஆபத்தானதாகும். ஆஸாத் காஷ்மீர் பற்றிய எந்தப் பேச்சையும் முதன்மைப்படுத்தாத பாகிஸ்தான் ஜம்மு - காஷ்மீர் பற்றியே அதிகம் பேசவிரும்புகிறது. இந்தியா புறப்பட முன்பு அளித்த பேட்டி ஒன்றில் இந்தியாவுடனான பேச்சு உறுதியானதாகவும் நேர்மையுடனும் தீவிர கவனத்தோடும் மேற்கொள் ளப்படும் என பாகிஸ்தான் வெளிவி வகாரச் செயலாளர் குறிப்பிட்டார். எனவே பேச்சுக்களில் பாகிஸ்தான் தரப்பு மிகத் தெளிவாகச் செயற்படுகின்றது.

ஜம்மு - காஷ்மீர் தொடர்பான விடயத்தை முதன்மைப்படுத்தாமலேயே 'ஆர்க்கா' மாநாடு குழம்பியமைக்கும் மற்றும் பல சந்திப்புக்கள் சாத்தியப்படாது போனமைக்கும் காரணமாகும். ஜம்மு - காஷ்மீரே பாகிஸ்தானியருக்கு பிரதான அரசியல் களமாக உள்ளது. அதனை சாத்தியமாகத் தருவித்தால் இரு நாடுகளுக்கும் இடையிலான இழுபறி முடிவுக்குவரும். அதனால் பாகிஸ்தான் வெற்றி கண்டுவிடும் என்பதுடன் அதன் பின்னாலுள்ள வெளிச்சக்திகள் ஊடுருவிவிடும். ஏறக்குறைய, தற்போதைய நிலையிலேயே பாகிஸ்தானின் ராஜீகநகர்வுகள் வெற்றி பெற்று விட்டன என்றே அரசியல் விமர் சகர்கள் கூறுகின்றனர்.

இதில் விசேடம் என்னவென்றால் பாகிஸ்தான் தரப்பு ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் நகர்த்துகின்றது. சமாதான உரையாடலை ஊக்குவிக்கும் அதே நேரம், இராணுவ ரீதியிலான ஆலோசனைகளையும் அதற்கான தயார்ப்படுத்தல்களையும் அமெரிக்காவிடமிருந்து பெற்றுவருகின்றது. மறுபக்கத்தில் காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் செயலாளர் பேச்சுககளுக்கு வரமுன்பே பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இத்தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் 8 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இன்னோர் தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்ட பெண்கள் பணயக்கைதிகளாக இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதலுக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் தொடர்பு அதிகம் காணப்படுவது உணரப்பட்டிருப்பதுடன் இதனையே எல்லை தாண்டிய பயங்கரவாதமென இந்தியா இதுவரை கூறிவந்தது.

இது பற்றி இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் ஒருவர் கருத்துக் கூறும் போது -

பாகிஸ்தானுடனான பேச்சுக்கள் நல்ல சூழலில் ஆரம்பமாகவில்லை என்றும், பாகிஸ்தான் பயங்கரவாத நடவடிக்கையை ஊக்குவித்துக் கொண்டு பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் கூறினார். மேலும் வாஜ்பாயின் அணுகுமுறையோடு ஒப்பிடும் போது புதிய அரசு நெருக்கடியான பாதைக்கு இந்தியாவை இழுத்துச் செல்கின்றதா என ஆச்சரியப்படவேண்டியுள்ளது என்றார்.



பர்வேஷ் முஷாரப்

எனவே இந்தியத் தரப்பு மேற்கொள்ளும் அணுகுமுறை ஆபத்தானதாகவே உள்ளது. பாகிஸ்தான் உலகளாவிய வலைப்பின்னலுக்குள் நின்று கொண்டு அல்லது அமெரிக்காவின் வரையறைக்குள் நின்று கொண்டு இந்தியாவுடனான உறவை அணுகும்போது இந்தியத் தரப்பு, இந்திய - பாகிஸ்தான் உறவுடனேயே இயங்குகின்றது. இந்தியாவின் காங்கிரஸ் கூட்டணியை ஏமாற்றும் முயற்சியில் பாகிஸ்தானும் பின்புலத்தில் அமெரிக்காவும் செயல்படுகின்றன.

காங்கிரஸ் கூட்டணியினர் காஷ்மீரின் தேசியப்பிரச்சினையை பேச்சுவார்த்தையில் எடுத்துக் கொள்வார்களாயின் பாகிஸ்தானின் திட்டமிடல்படி பெரும் நெருக்கடியை இந்தியா எதிர்நோக்கும். புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்பு காஷ்மீருக்கு விசேட தனித்துவ ஆட்சியை சிபார்சு செய்யப்போவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. பின்னர் அவை ஆளும் தரப்பால் மறுக்கப்பட்டது.

ஆனால் தற் போதைய சூழல் அதனை மேலும் உறுதிப்படுத்துவதுபோல் தெரிகின்றது. அவ்வாறு காஷ்மீர் விடயத்தை புதிய அரசு கையாளுமாயின் தென்னாசியாவின் தேசிய இனப்பிரச் சினைகளில் இந்தியாவின் அணுகு முறையில் மாறுதல் ஏற்பட வேண்டும். அது முழுமையான மாறுதலாக அமையுமாயின் அதிக நன்மை யடையும் மக்களாக இலங்கைத் தமிழர்களே விளங்குவார்கள். ஆனால் ஆட்சியாளரின் அரசியல் அப்படி அமைவதில்லை.

எனவே பாகிஸ்தான் பிரதமர் ஜமாலியின் பதவி விலகலானது பிராந்தியமட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் பாதிப்பை நிகழ்த்தக் கூடிய ஒன்றாக அமைந்திருக்கின்றது. உள்நாட்டிலும், பிராந்தியத்திலும் ஜமாலியின் அரசியல் போக்கு முஷாரப்புக்கு அதிக பாதுகாப்பைக் கடந்த காலத்தில் ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தியாவில் பாரதிய ஜனதாவின் ஆட்சியும், ஆப்கானிஸ்தானில் தீவிரவாதத்தின் செல்வாக்கும் போதும் ஜமாலியின் அணுகுமுறை முஷாரப்புக்குத் தேவைப்பட்டது. இன்று ஜமாலியின் அணுகு முறை முஷாரப்புக்குத் தேவையற்றதாக மாறிவிட்டது. தற்போது தந்திரமும், கடும்போக்கும் பாகிஸ்தான் அரசியலில் அவசியமான அரசியலாகக் காணப்படுகின்றது. அதனைப் பிரதமர் கையாளாவிட்டாலும் ஜனாதிபதியின் கையாளுகையை பிரதமர் விமர்சிக்கவோ, தடுக்கவோ கூடாது. அதுவே முஷாரப்பின் புதிய சீர்திருத்தம் என்பதாகும். புதிய சீர்திருத்தங்களை அமுலாக்கவே புதிய பிரதமர் தேவைப்படுகிறார் என ஜமாலியின் பதவி விலகலை ஏற்றுக் கொண்ட போது முஷாரப் குறிப்பிட்டிருந்தார்.

# அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுவதை துருக்கி உடன் நிறுத்திவிட வேண்டுமாம்!

## இஸ்லாமிய தீவிரவாதிகள் எச்சரிக்கை



ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினருடன் இணைந்து செயற்படுவதை நிறுத்தவேண்டுமெனவும், துருக்கி செல்லவுள்ள அமெரிக்க அதிபர் புஷ்ஷின் விஜயத்தை எதிர்க்கவேண்டுமெனவும், அவ்வாறில்லையெனின் கடத்தப்பட்ட மூன்று துருக்கியர்களும் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்படுவரென இஸ்லாமிய போராளிக்குழு துருக்கிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் பணிபுரிந்த மூன்று துருக்கிய நாட்டவர்கள் - அல் கொய்டா அமைப்பின் தலைவர்களில் ஒருவரான அபு முசாப் அல் சர்காவியின் தலைமையின் கீழ் உள்ளவர்களினால் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களே இந்த எச்சரிக்கையை விடுததுள்ளனர்.

இது தொடர்பாக கட்டாரிலிருந்து ஒளிபரப்பாகும் அல் ஜசீரா தொலைக்காட்சி சேவைக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒளிநாடாவில் துருக்கியர்கள் மூவரும் முழங்காலில் நிறுத்தப்பட்டு தமது கடவுச்சீட்டுக்களை கைகளில் வைத்துள்ளனர்.

இவர்களின் பின்னே இரண்டு ஆயுததாரிகள் முகத்தை துணியால் மூடியபடி நிற்கின்றனர். அவர்களின் பின்னே அராபிய எழுத்துக்களில் அல் சர்காவி அமைப்பு என கறுப்பு துணியினால் எழுதப்பட்ட பதாதை கட்டப்பட்டிருந்தது.

அந்த ஒளிநாடாவில், ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படையினருடன் இணைந்து செயற்படுவதை துருக்கி நிறுத்தவேண்டும். நேட்டோ அமைப்பின் மாநாடு துருக்கியில் இன்று நடைபெறுகிறது. அதற்கு அமெரிக்க அதிபர் புஷ் செல்லவுள்ளதனை எதிர்க்கவேண்டுமென்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கைகளை துருக்கிய அரசாங்கம் ஏற்கத் தவறும் பட்சத்தில் கடத்தப்பட்ட மூவரும் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த ஒளிநாடாவை தாம் பெற்றுக்கொண்டதாக அல் ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்தது. ஆனாலும், இந்த ஒளிநாடாவில் இந்த மூன்று துருக்கியர்களும் எங்கே எப்போது



கைதுசெய்யப்பட்டனர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. இவர்களுக்கான காலக்கெடு நாளையுடன் முடிவடைகிறது.

ஈராக்கில் பணிபுரிந்த இவர்கள் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் காணாமற்போனதாகவும், இவர்கள் தொடர்பான மேலதிக தகவல் எதுவும் தனக்குக் கிடைக்கவில்லையெனவும் பாக்தாத்தில் உள்ள துருக்கி அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஹிலா நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 22 பேர் படுகாயமடைந்ததாக இராணுவத் தரப்பு தெரிவித்தது.

அத்துடன், பலூஜா நகரில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும், ஆனால் சேதவிபரம் குறித்த உடனடித் தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை எனவும் தகவல்கள் தெரிவித்தன.

உலக நோக்கு

# பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி பதவியிலிருந்து விலகினார்!



பாகிஸ்தான் பிரதமரான ஸபருல்லா ஜமாலி தனது பிரதமர் பதவியை நேற்றுமுன்தினம் ராஜினாமா செய்தார். அதிபர் பர்வேஷ் முஷாரப்புடன் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணத்தினாலேயே - இவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - கடந்த 19 மாதங்களாக பாகிஸ்தான் பிரதமராக ஸபருல்லாகான் ஜமாலி இருந்துவந்தார். 60 வயதான ஜமாலியின் நிர்வாகம் சரியில்லை என்று ஜனாதிபதி முஷாரப் அதிருப்தி கொண்டிருந்தார்.

இதற்கிடையில், நாடாளுமன்ற கூட்டத்தில் முஷாரப்பை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையாக தாக்கிப் பேசினார்கள். ஆனால் சபையில் இருந்த பிரதமர் ஜமாலி இதனைக் கண்டுகொள்ளவில்லை. முஷாரப்பைப் பாதுகாக்கும் வகையில் எதுவும் பேசவில்லை.

பிரதமர் ஜமாலியின் இந்த செயல முஷாரப்புக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தி இருந்தது. எனவே ஜமாலியை நீக்க முஷாரப் திட்டமிட்டிருந்ததாக கூறப்பட்டது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி முஷாரப் ஸ்கண்டிநேவியா நாட்டுக்குச் செல்லவிருக்கிறார். அதற்கு முன்பு ஜமாலி நீக்கப்பட்டு புதிய பிரதமர் நியமிக்கப்படுவார் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் பரபரப்பு செய்தி வெளியிட்டன.

இந்த நிலையில் பிரதமர் ஜமாலி நேற்றுமுன்தினம் தனது பதவியை ராஜினாமா செய்து மந்திரி சபையையும் கலைத்தார். தனது கட்சி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாக குழு கூட்டத்தில் இதை அறிவித்த ஜமாலி, தன்னுடைய ராஜினாமா கடிதத்தை கட்சியின் தலைவர் சவுதாரி சுஜ்ஜத் ஹுசைனிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

அடுத்த பிரதமராக சுஜ்ஜத் ஹுசைனை அவரே முன்மொழிந்தார். அவருக்கு கூட்டணி கட்சியினர் எல்லோரும் ஒத்துழைப்பு தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

'எனக்குப்பின் ஒரு நல்லவர் கட்சியையும், நாட்டையும் நல்ல முறையில் வழிநடத்துவார் என்ற நம்பிக்கையில் வெளியேறுவதாகவும், என்னுடைய முடிவு கட்சியை பலப்படுத்துமானால் சந்தோஷமடைவதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.

இனிமேல் எந்தப் பதவியையும் வகிக்கமாட்டேன். ஒரு சாதாரண தொண்டனாக இருந்து கட்சிக்காக உழைப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

'கட்சிக்காக சிரத்தையுடன் உழைத்தேன். எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப என்னால் வரமுடியவில்லை. பல மாதங்களாக உலவி வந்த ஊகங்களுக்கு என் ராஜினாமா முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்கவே பாடுபட்டேன். யாரையும் நான் புண்படுத்தியதில்லை. ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னித்து விடுங்கள்' என்றும் அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

விரக்தி அடைந்த நிலையில் காணப்பட்ட ஜமாலி, அவசர அவசரமாக, பிரதமர் பொறுப்பை ஆளும் கட்சி தலைவரான சுஜ்ஜத் ஹுசைனிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறி விட்டார்.

பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த செய்தித்துறை மந்திரி ஷேக் ரஷீத், தற்காலிக பிரதமராகத்தான் சுஜ்ஜத் ஹுசைன் பொறுப்பு ஏற்றிருக்கிறார். அடுத்த பிரதமராக, பிரபல பொருளாதார நிபுணரும், முன்னாள் நிதி மந்திரியுமான சவுகத் அஜீஸ் பதவியேற்பார் என்று அறிவித்தார்.

## கிளின்டன் செல்வாக்கு அதிகரிப்பு



அமெரிக்க முன்னாள் அதிபர் கிளின்டன் - தனது வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை எழுதினார். 'மை லைவ்' என்ற இந்தப் புத்தகம் அமோகமாக விற்பனையாகி வருகிறது.

இப் புத்தகத்தின் மூலம் கிளின்டன் செல்வாக்கு, அவர் அதிபராக இருந்த போது கிடைத்த செல்வாக்கை விட இப்போது அதிகமாகி இருக்கிறது. இந்தப் புத்தகத்தை விளம்பரப்படுத்துவதற்காக கிளின்டன் இப்போது சுற்றுப்பயணத்தில் இருக்கிறார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு அவர் வந்தபோது அங்குள்ள பள்ளிக்கூட சிறுவர் சிறுமிகள் அவரை சூழ்ந்து கொண்டு அவருடன் உரையாடியதுடன், அங்குள்ள நகரசபை ஊழியர்கள் மத்தியிலும் கிளின்டன் பேசினார்.

# இஸ்லாமிய போராளிகள் எழுவர் நப்லஸ் நகரில் சுட்டுக்கொலை!



பலஸ்தீனத்தின் நப்லஸ் நகருக்குள் பிரவேசித்த இஸ்ரேல் இராணுவத்தினர் அங்கு இஸ்லாமிய போராளிகளில் எழுவரை சுட்டுக்கொன்றனர்.

கொல்லப்பட்டவர்கள் அல் அக்சா மாட்டியர்ஸ் பிரிகேட், ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவர்களாவர்.

கொல்லப்பட்டவர்களில் நஜீப் அபு சார்கி அல் அக்சா மாட்டியர்ஸ் பிரிகேட்டின் தலைவர்களில் ஒருவரெனவும், இவர் இஸ்ரேலிய இராணுவத்தினால் தேடப்பட்டு வந்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றையவர்கள் ஜிகாத் அமைப்பின் மேற்குக்கரை தளபதி ஷேக் இப்ராஹிம் எனவும், மற்றவர் ஹமாஸ் அமைப்பின் உள்ளூர் தலைவரெனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மூவரும் கொல்லப்பட்டதை பலஸ்தீன வைத்தியசாலையும் உறுதிப்படுத்தியுள்ளது.

நப்லஸ் நகருக்குள் பிரவேசித்த இஸ்ரேலிய இராணுவம் இந்த எழுவரையும் கண்டுபிடித்து சுட்டுக்கொன்ற பின்னர், அந்தப் பகுதியிலிருந்து தற்போது வெளியேறிவருவதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரியான லெப்.கேணல் இற்சிக் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இப்பகுதியில் அல் அக்சா மாட்டியர்ஸ் பிரிகேட்டைச் சேர்ந்த ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலுக்காக தாம் பதில் தாக்குதலை நடத்தப்போவதாக அல் அக்சா மாட்டியர்ஸ் பிரிகேட் சூளுரைத்துள்ளது.





மொறாயஸ்
பல், மூக்குக் கண்ணாடியகம்

1962 ஆம் ஆண்டு முதல் வெலிங்டன் திரையரங்கிற்கு முன்னால் இயங்கிய மொறாயஸ்-வாடிக்கையாளர்களின் நலன் கருதி

இல.546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் இன்று (2004.06.28) தொடக்கம் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பல் கட்டுதல், பல்கிளிப் போடுதல்
- இலவசமுறையில் கண் பரிசோதனை செய்து மூக்குக்கண்ணாடி வழங்கப்படும்.

கிளை:- இல-5 பலாலி வீதி
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.
021-222-3386

(சி-2704)


## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

அயன மண்டல நாடுகளில் கண்டல் காடுகள் 85 வீதமான வர்த்தக மீன் இனங்களின் வளர் இடங்களாக விளங்குகின்றன.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் - முஸ்லிம் பிரமுகர்கள் மூதூரில் சந்தித்துப் பேச்சு!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - மூதூர் பிரதேச முஸ்லிம் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மூதூரில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணிமனையில் இடம்பெற்றது.

கடந்த 4 மாதங்களுக்குப்பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் முன்னிலையில் நடந்த இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், மூதூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தங்கன், திருகோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் குஞ்சன், கபில் மாஸ்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் பிரமுகர்களின் சார்பில் மௌலவி அப்துல் கரீம் உட்பட மஜ்லிஸ் அல் மசூராவைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே எவ்வித பிரச்சினையும் ஏற்படாது பார்த்துக்கொள்வதெனவும்,

பிரச்சினைகள் ஏதும் உருவாகும் பட்சத்தில் இரு தரப்பினரும் கலந்துபேசி இதற்கான தீர்வைக் காண்பது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

# அரச அச்சகத் தீ விபத்து; பகுப்பாய்வுகள் ஆரம்பம்!

அரச அச்சகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீ விபத்துத் தொடர்பாக பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நெவில் நாணயக்கார நேற்று இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

களஞ்சியக்காப்பாளரின் அறையிலிருந்தே தீ பரவியமைக்கான சான்றுகள் தென்படுகின்றன. அலுவலக நேரம் முடிவடைந்து ஊழியர்கள் வீடு சென்றபின் இந்தத் தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி முழுமையாக ஆராயவேண்டியுள்ளது.

அரச காகிதங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் இந்தத் தீ விபத்தின்போது எரியாது பாதுகாப்பாக மீட்கப்பட்டன. கணக்குப் புத்தகங்களே இந்தத் தீ விபத்தால் எரிந்து நாசமாகியுள்ளன.

எனினும், அவை கடந்த மாதமே தொகுக்கப்பட்டவை என்பதால் அவை தொடர்பான விபரங்கள் விரைவில் மீள பெற்றுக்கொள்ளப்பட்டுவிடும்.

எனினும், அச்சக நடவடிக்கை மீளவும் விரைவில் ஆரம்பமாகும். பகுப்பாய்வு முடிந்த பின்னர் இந்தத் தீ விபத்தால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக முழுமையான விபரம் பெறப்படும்.

இது தொடர்பாக பகுப்பாய்வு அதிகாரிகள் மற்றும் பொலிஸார் தமது கடமைகளை ஆரம்பித்துள்ளனர். அவர்களது கடமைகள் முடிவடைந்த பின்னரே எதனையும் தெளிவாகக் கூறமுடியும் என்றார்.

## காவல்துறை உறுப்பினர் புலிகளிடம் ஒப்படைப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மகிந்தபுர இராணுவ சோதனைச்சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த வசிகரன் என்பவர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டார்.

சேருநுவர பொலிஸ் நிலையத்தில் வைத்து இவர் நேற்று ஒப்படைக்கப்பட்டார். இதன்பின்னர் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

மலையக மக்களுக்கு —

# உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவே கூட்டமைப்புடன் இணைந்துள்ளோம்!

## சந்திரசேகரன் எம்.பி. தெரிவிப்பு

மலையக மக்களுக்கு உரிமையினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடனேயே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் தாம் இணைந்து செயற்படுவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் மலையக மக்கள் முன்னணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய கூட்டத்திலேயே சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்றத்தில் மலையக மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்கள் குரல் கொடுக்கும்போது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கிவருகின்றார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்கள் போன்று மலையக மக்கள் ஐம்பது வருடகாலம் காத்திருக்கும் நிலையிலேயோ, போராடும் நிலையிலேயோ இல்லை.

வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் ஐம்பது வருடகாலம் போராடிய பின்னரே அவர்கள் இன்று உரிமைகளை பெற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளனர்.

ஆனால், மலையக மக்களுக்கு அந்தளவுக்கு போராடக்கூடிய ஆற்றலோ, பொறுமையுணர்வோ இல்லையென சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

இந்தக்கூட்டத்தில், தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த ஈழவேந்தனும் உரையாற்றினார்.

# அரசியல் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளமாட்டேன்

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச அமைச்சர்கள் மற்றும் அதியுயர் பீட அரசியல் தலைவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில் நான் இனிக் கலந்துகொள்ளமாட்டேன் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக்காலை அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்றின் கௌரவம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற கௌரவம் பாதுகாக்கப்படும் போதுதான் அரசுக்கும் கௌரவம் இருக்கும்.

நாடாளுமன்றில் நடைபெற்ற நிகழ்வுகள் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், அரசியற்தலைவர்களோ, அமைச்சர்களோ பங்குகொள்ளும் எந்தப் பொது நிகழ்வுகளிலும் இனிமேல் நான் பங்குகொள்ளப் போவதில்லையென முடிவு செய்துள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவ கருணாநாயக்கவைக் கைதுசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை ஜனநாயகத்திற்கு முரணானதாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய பொலிஸ்மா அதிபராக ஜெயதிஸ்ஸ ஹேரத்

இலங்கையின் புதிய பொலிஸ் மா அதிபராக, ஜெயதிஸ்ஸ ஹேரத் நியமிக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக் காலம் இன்னும் இரண்டு மாதங்களில் முடிவடையவுள்ளது. ஓய்வுபெற்றுச் செல்லும் இவரது இடத்துக்கே பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயதிஸ்ஸ ஹேரத் நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை, அடுத்த பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படவுள்ள ஜெயதிஸ்ஸ ஹேரத்தின் பதவிக் காலம் எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் முடிவடையவிருக்கிறது.

## பன்னாட்டு பிளட்டூன்...

களின் இராணுவத் தளபதிகள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

நிகழ்வில் உரையாற்றிய இலங்கை இராணுவத்தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை இராணுவத்தினர் 750 பேர் கலகத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக ஹெயிட்டிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

நாடொன்றின் கலகத் தடுப்புக்காக இலங்கை இராணுவத்தினர் அனுப்பப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இலங்கையில் ஐ.நா சபை அனுசரணையுடன் சமாதானப் பயிற்சி நடத்தப்பட்ட முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். எதிர்காலத்தில் இவ்வாறு இலங்கைப் படையினர் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் இராணுவத்தளபதி லெப் ஜெனரல் லயனல் பலகல்ல கலந்துகொண்ட இறுதி வைபவம் இதுவென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி இவர் இலங்கையில் 16 ஆவது இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார்.

## சமாதானப் பேச்சுக்களை...

வேண்டும் என்பதை நோர்வே ஊடாகப் புலிகள் வலியுறுத்தவுள்ளனர்.

மீளவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கு - நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நாளை மறுதினம் கிளிநொச்சி வரவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது புலிகளின் இந்தக் கடுமையான நிலைப்பாடு குறித்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே அனுசரணையாளருக்குத் தெரியப்படுத்துவார் என்று கூறப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் கருணா விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

## அக்கரைப்பற்றில்...

செய்யப்பட்டவரே இந்த தாக்குதலில் கொல்லப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (07)

## ஆறுவாரகா...

கரிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்லவின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு இந்த மாத ஆரம்பத்தில் தீர்மானித்திருந்தாகவும், கருணாவின் விவகாரம் பூதாகரமாகி வருவதையடுத்தே திடீரெனத் தனது முடிவை மாற்றி சாந்த கொட்டே கொடவை எவ்வித தாமதமுமின்றி இராணுவத் தளபதியாக நியமனம் செய்வதற்கு உத்தரவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலகத்தினால் இந்த அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டது.

எனவே, இலங்கையின் 17 ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட எதிர்வரும் ஜீலை முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார். அத்துடன், ஜீலை முதலாம் திகதி முதல் லெப். ஜெனரல் பதவியுயர்வையும் பெறவுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல கடந்த 12 ஆம் திகதி முதல் மன்னார், வவுனியா மற்றும் ஓமந்தைப் பகுதிகளிலுள்ள படை முகாம்களுக்குச் சென்று தனது பிரியாவிடை உரையினை நிகழ்த்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.


## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை

## 'பாஸ்போட்' தவறவிடப்பட்டுள்ளது

முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை (25.06.2004) அன்று 3 மணியளவில் **ஆறுமுகம் வரதன்** என்பவரது கனடா நாட்டிற்கான பாஸ்போட் தவறவிடப்பட்டுள்ளது. அதனை வைத்திருப்போர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

நமது ஈழநாடு,
இல. 267,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

அல்லது

ஆ.வரதன்,
காரைக்கால் றோட், இணுவில்
T.P. No: 077 6514790
021 4590742

(சி-2709)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகம் பொன்னம்மா

*(வருணன் அச்சுவேலி)*

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10.00 மணிக்கு புலோலி ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*நிருபர் வளவு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*
*T.P. : 021 2263603, 077 7143022*

தகவல்:
ஏ.என்.எஸ்.திருச்செல்வம்
(மருமகன்)

(சி-2710)


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.